24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 24
விலை - 30 ரூபா

சுடர் 34 கதிர் 174 வைகாசி 07ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 21 மே 2019 வள்ளுவர் ஆண்டு 2050

## கூட்டமைப்புடைய ஆதரவை பெறுவதற்கு ரிசாத் முயற்சி

### கூடிக் கலந்தாலோசித்து முடிவு எனச் சம்பந்தன் பதில்



கொழும்பு, மே 21
தனக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பில் நேற்றுத் தொலைபேசியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுடன் பேசியுள்ளார் அமைச்சர் ரிசாத் பதியுதீன். நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்க்கவேண்டும் என்று அவர் கோரியுள்ளார்.
“நான் இப்போது திருகோணமலையில் தங்கியுள்ளேன். கொழும்பு வந்ததும் கூட்டமைப்பின் சக நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இது பற்றிப் பேசவுள்ளேன். அவர்களின் கருத்துக்களையும் உள்வாங்கி அதன் பின்னர் தீர்மானம் தொடர்பில் ஒரு முடிவை எடுப்போம். அதன் 19

## ஐ.தே.மு. அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம்

### சபாநாயகரிடம் இன்று கையளிக்கின்றது ஜே.வி.பி.

கொழும்பு, மே 21
உயிர்த்த ஞாயிறன்று ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளால் இலங்கையில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல்க 19

## ரிசாத் பதவி விலக அவசியம் இல்லை

### கட்சியின் மூத்த உறுப்பினர்களின் கோரிக்கையை நிராகரித்தார் ரணில்

கொழும்பு, மே 21
அமைச்சர் ரிசாத் பதியுதீன் அமைச்சுப்பதவியிலிருந்து தற்காலிகமாக விலக வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் விடுத்த கோரிக்கையைத் 19

see more news in
newuthayan.com

## இன்று முதல் பாடசாலைக்கு மாணவர்களை அனுப்புங்கள்

### *கல்வி அமைச்சர் பெற்றோரிடம் கோரிக்கை*

கொழும்பு, மே 21
இன்று முதல் மாணவர்களைப் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப் பெற்றோர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.
நேற்றுக் கொழும்பில் உள்ள அவரது இல்லத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.
அவர் தெரிவித்ததாவது
அரசியல்வாதிகளின் தனிப்பட்ட நோக்கங்களுக்காக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிக்க இடமளிக்க முடியாது. பாடசாலைகளுக்கு மாணவர்களின் வருகை வீதம் குறைவடையும் பட்சத்தில் இடம்பெறவுள்ள தவணை பரீட்சைகள் உள்ளிட்ட க.பொ.த. சாதாரணதர மற்றும் உயர்தர பரீட்சைகள், ஏனைய கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன. ஆகவே நாளை (இன்று) முதல் மாணவர்களை பாடசாலைகளுக்கு 19



## சிறப்புற நேற்று நடந்தது வற்றாப்பளை பொங்கல்

### ஆயிரக்கணக்கானோர் கூடி கண்ணகி அம்மன் அருள் வேண்டினர்

முல்லைத்தீவு, மே 21
வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்தப் பொங்கல் உற்சவம்நேற்று அதிகாலைமுள்ளியவளை காட்டா விநாயகர் ஆலயத்தில் இருந்து மடப்பண்டம் எடுத்துவரப்பட்டு ஆரம்பமானது. பொங்கல் உற்சவத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.
உப்பு நீரில் விளக்கெரியும் அன்னைக்குத் தீர்த்தம் எடுக்கும் நிகழ்வு கடந்த 13ஆம் திகதி முல்லைத்தீவு 19

## ரிசாத் விலக வேண்டும்: அமைச்சர் வலியுறுத்து

கொழும்பு, மே 21
அமைச்சர் ரிசாத் பதியுதீன் அமைச்சுப் பதவியில் இருந்து விலக வேண்டும் என்று இராஜாங்க அமைச்சர் நிரோஷன் பெரேரா தெரிவித்துள்ளார்.
நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் தெரிவித்ததாவது; 19

## ஈஸ்டர் தின தாக்குதல்கள்: 3 பேர் கைது

கொழும்பு, மே 21
ஈஸ்டர் தினத் தாக்குதல்களுடன் நேரடித் தொடர்புகளைக் கொண்டவர்கள் என்ற சந்தேகத்தில் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.
இவர்கள் அம்பாறை, கல்முனைப் பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.
புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவல்களை அடுத்து முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையின்போது சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும், அவர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ)

## யாழ். அழைத்து வரப்பட்ட ஏதிலிகள் ஆளுநரின் பணிப்பால் இடம்பெயர்வு

19

## வாட்டி வதைக்கின்றது வறட்சி! மூன்று இலட்சம் பேர் பாதிப்பு!!

கொழும்பு, மே 21
இலங்கையின் 17 மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள வறட்சி காரணமாக சுமார் 3 இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். வடக்கு, கிழக்கு மலையகம் உள்ளிட்ட நாட்டின் 17 மாவட்டங்களில் 19


## கேவில் கடலில் மூழ்கி மீனவர் ஒருவர் சாவு!



யாழ்ப்பாணம், மே 19
வடமராட்சி, போக்கறுப்பு, கேவில் கடலில் மூழ்கி மீனவர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.
கட்டைக்காடு, முள்ளியானைச் சேர்ந்த கமலதாஸ் அமலதாஸ் (வயது-38) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
கடலில் கரைவலைத் தொழிலில் ஈடுபட்டு வட்டு படகில் இருந்து இறங்கிச் சென்றபோது அவர் 19

# வைகாசி மாத ராசிபலன்

(மே 15 முதல் ஜூன் 15 வரை)



12இல் சுக்கிரன்; ஒன்றில் சூரியன்; 1, 2ல் புதன்; 2இல் செவ்வாய், ராகு; 8ல் சனி, கேது; 8, 7ல் குரு ரிஷபராசி அன்பர்களே! சுக்கிரன், குரு ஆகியோரால் நற்பலன்கள் ஏற்படும். புதனால் ஓரளவு அனுகூலம் உண்டு. ராகு, சுக்கிரன் ஆகியோர் மாதம் முழுவதும் நற்பலன்களைத் தருவார்கள். மற்ற கிரகங்களால் அனுகூலமான பலன்கள் ஏற்படும் என்று சொல்வதற்கில்லை. குடும்பத்தில் உள்ளவர்களாலும் அக்கம்பக்கத்தில் உள்ளவர்களாலும் சிறு சிறு பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

மிகவும் பொறுமை யாக இருக்கவேண்டியது அவசியம். எதையும் சமாளிக்கும் மனஉறுதி அதிகரிக்கும். சுக்கிரன் சாதகமாக இருப்பதால் புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை ஏற்படும். சிலருக்கு வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் பொருள்சேர்க்கைக்கும் பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. உறவினர், நண்பர் வீட்டு விருந்து விசேஷங்களுக்குச் சென்று வருவீர்கள். செல்வாக்கும் கௌரவமும் அதிகரிக்கும். கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்திருந்த கணவன் மனைவி ஒன்று சேரும் வாய்ப்பு உண்டாகும். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும். சிலருக்குக் குழந்தைப் பாக்கியம் ஏற்படக்கூடும்.

குடும்பத்தினரின் அவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். சிலர் பழைய வாகனத்தை மாற்றி புதிய வாகனம் வாங்குவீர்கள். பிள்ளைகளின் கல்வி மற்றும் திருமண முயற்சிகளில் சற்று சிரமப் பட்டே அனுகூலமான பலன்களை அடைய முடியும். பிள்ளைகளின் பிடிவாதப் போக்கு மாறும்.

தாய்மாமன் வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். அலுவலகத்தில் பணிச்சுமை

## பொறுமை அவசியம்

### இடபம்



அதிகரிக்கும். நேரம் காலம் பார்க்காமல் உழைக்கவேண்டி யிருக்கும். உங்கள் வேலைகளை நீங்களே செய்துகொள்வது நல்லது. அதிகாரிகளிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

தொழில் வியாபாரத்தில் முன்னேற்றமான நிலை உண்டாகும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். வியாபாரத்தை விரிவு படுத்துவதற்கான வங்கிக் கடனுதவி கிடைக்கும்.

எதிர்பார்த்த அரச சலுகைகள் கிடைக்கும். மாணவர்கள் மேற்படிப்பில் சேர்வதற்கு அதிக சிரத்தை எடுத்துக்கொள்ளவேண்டும்.

சிலரின் சிபாரிசும் தேவைப்படும். ஆனால், படிப்பதற்கான நிதியுதவி கிடைப்பதில் தடையிருக்காது. குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு குடும்ப உறுப்பினர்களின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் அனுசரணையாக நடந்துகொள்வார்கள். அலுவலகம் செல்லும் பெண்கள் அனைத்து விடயங்களிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டியது அவசியம்.

(தொடரும்)


# மே மாத எண் ஜோதிடப் பலன்கள்

எண் ஜோதிடப்படி மே மாதத்தில் எந்த திகதிகளில் பிறந்தவர்களுக்கு என்ன என்ன பலன்கள் என்பதைப் பார்ப்போம்.

**6, 15, 24 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களுக்கு**

எதிர்ப்புகளை சாமர்த்தியமாக எளிதில் வெல்லும் ஆறாம் எண் அன்பர்களே இந்த மாதம் எந்த ஒரு சின்ன விஷயம் கூட லாபமாக நடந்து முடியும். முக்கிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். பூமி, வாகனம் மூலம் ஆதாயம் உண்டாகும். பண வரத்து கூடும். தொழில் வியாபாரத்தில் வாங்கிய கடனை திருப்பி செலுத்தி மன நிம்மதி அடைவீர்கள். செயல் திறமை மூலம் கடினமான பணியையும் சிறப்பாக செய்து முடிந்து மேல் அதிகாரிகளின் பாராட்டு கிடைக்க பெறுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியும், அமைதியும் உண்டாகும். சுபகாரியம் நடக்கும்.

பெண்களுக்கு எல்லாவற்றிலும் லாபம் கிடைக்கும். கலைத்துறையினருக்கு தொழில் தொடர்பான நெருக்கடிகளை சந்திக்க வேண்டி வரும். அரசியல்துறையினருக்கு அடுத்தவர்களிடம் வாக்குவாதத்தை தவிர்ப்பது நன்மை தரும். மாணவர்களுக்கு கல்வியில் கூடுதல் மதிப்பெண் கிடைக்க எடுக்கும் முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். ஆசிரியர்களின் பாராட்டும் கிடைக்கும்.



**7, 16, 25 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களுக்கு**

நியாயமுள்ளவர்களுக்காகவும் நலிந்தவர்களுக்காகவும் பாடுபடும் குணமுடைய ஏழாம் எண் அன்பர்களே இந்த மாதம் பணவரத்து இருக்கும். எந்த ஒரு காரியத்திலும் அவசர முடிவு எடுக்க தூண்டும். வீண் வாக்குவாதங்களால் பகையை வளர்த்துக் கொள்ளாமல் இருப்பது நல்லது.

தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் தங்கள் வியாபாரம் தொடர்பாக அலைய வேண்டி இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் சக பணியாளர்களிடம் வீண் பேச்சுக்களை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தில் விருந்தினர் வருகையால் திடீர் செலவுகள் ஏற்படலாம்.

பெண்களுக்கு முக்கியஸ்தர்களின் ஆதரவு கிடைக்கும். கலைத்துறையினர் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். அரசியல்துறையினருக்கு மேலிடத்துடன் கருத்து வேற்றுமை உண்டாகலாம். மாணவர்களுக்கு கல்வியில் திருப்தியான நிலை காணப்படும். தன்னம்பிக்கை அதிகரிக்கும். கல்வியில் மேன்மை ஏற்படும்.

**8, 17, 26 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களுக்கு**


பிறர் குற்றங்களை எளிதில் மன்னிக்கும் குணமுடைய எட்டாம் எண் அன்பர்களே இந்த மாதம் திட்டமிட்டபடி காரியங்களை செய்து முடிப்பீர்கள். பணவரத்து தாமதப் பட்டாலும் கையில் இருப்பு இருக்கும். வேளை தவறி சப்பிட வேண்டி இருக்கும். முக்கியமான பணிகள் தாமதமாக நடக்கும். வீண் விவகாரங்களில் தலையிடாமல் ஒதுங்கி சென்று விடுவது நல்லது. உடல் ஆரோக்கியம் அடையும். தொழில், வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் கடின உழைப்புக்குப் பின் முன்னேற்றம் அடைவார்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திறமையாக செயல்பட்டு பாராட்டு பெறுவார்கள். குடும்பத்தில் பிள்ளைகளால் பெருமை உண்டாகும்.

பெண்களுக்கு மனதில் இருந்த சோர்வு நீங்கி உற்சாகம் உண்டாகும். கலைத்துறையினருக்கு உடல் ஆரோக்கியம் பெறும். அரசியல்துறையினருக்கு நிதி நிலைமை சீர்படும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் காண்பதில் ஆர்வம் உண்டாகும். மனதில் உற்சாகம் ஏற்படும்.

**9, 18, 27 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களுக்கு**

எந்த ஒரு சிறிய விடயத்தையும் கவனமாக கிரகித்துக் கொள்ளும் தன்மை உடைய ஒன்பதாம் எண் அன்பர்களே இந்த மாதம் ஒரு சில காரியங்களில் அவசரமாக முடிவு எடுப்பதை தவிர்ப்பது நன்மை தரும். முக்கிய நபர்களின் அறிமுகம் கிடைப்பதுடன் அவர் மூலம் உதவியும் கிடைக்கும். வெளியூர் பயணம் செல்ல நேரிடலாம்.

தொழில், வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் வெளியூர் செல்ல நேரிடும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலக வேலையாக முக்கிய நபர்களை சந்திக்க வேண்டி இருக்கும். குடும்பத்தில் வீண் வாக்குவாதங்கள் ஏற்படலாம். பெண்களுக்கு எந்த காரியத்திலும் ஈடுபடும் முன்பு திட்டமிட்டு செயல்படுவது நல்லது. கலைத்துறையினருக்கு புதிய ஒப்பந்தங்கள் கிடைக்க பட்ட சிரமங்கள் குறையும். அரசியல்துறையினருக்கு இறுக்கமான சூழ்நிலை நீங்கி மகிழ்ச்சி உண்டாகும். மாணவர்களுக்கு கல்வியில் இருக்கும் மந்த நிலை மாற கூடுதல் கவனத்துடன் படிப்பது அவசியம். எந்த வேலையிலும் முழு கவனம் தேவை.



## கமத்தொழில் அமைச்சு
## கேள்வி அறிவித்தல்

**வடமாகாண விவசாய நவீன மயமாக்கல் செயற்திட்ட அலுவலகத்திற்கு அலுவலக உபயோகத்திற்காக மாதாந்த வாடகை அடிப்படையில் அலுவலக கட்டடம் பெற்றுக் கொள்ளல்**

வடக்கு மாகாண சபையின் விவசாய நவீன மயமாக்கல் செயற்திட்ட அலுவலகத்திற்கு மாதாந்த வாடகை அடிப்படையில் அலுவலக கட்டடம் பெற்றுக் கொள்ளல் தொடர்பான கேள்வி அறிவித்தல் மாகாண பிரதி திட்ட பணிப்பாளர் அவர்களால் கோரப்படுகின்றது.

இக் கேள்வி ஆவணத்தை வழங்கவுள்ள வழங்குநர்கள் இவற்றிக்கான கேள்வி ஆவண பத்திரத்தினை இல.127, கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள எமது விவசாய நவீன மயமாக்கல் செயற்திட்ட அலுவலகத்தில் 22.05.2019 ஆம் திகதியிலிருந்து 29.05.2019 ஆம் திகதி வரை அலுவலக கடமை நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். முழுமையாக பூரணப்படுத்திய கேள்வி ஆவணங்கள் 06.06.2019 ஆம் திகதி பிற்பகல் 02.00 மணிக்கு முன்னர் எமது அலுவலகத்திற்கு பதிவு தபாலிலோ/ நேரடியாகவோ கிடைக்குமாறு அனுப்பி வைக்கவும்.

**மாகாண பிரதி திட்ட பணிப்பாளர்,**
**விவசாய நவீன மயமாக்கல் செயற்திட்டம்,**
**வடக்கு மாகாணம்.**

(CS 10214)(14.17)

## கண்ணீர் அஞ்சலி

மன்ற உறுப்பினர் கு.சற்குணராஜா (உரிமையாளர் - குணம் ஸ்ரோர்ஸ், சாவகச்சேரி) அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி திலகவதி குமாரசாமி**

அவர்கள் 19.05.2019 ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார். அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு மன்றம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.

**சாவகச்சேரி கைத்தொழில்**
**வணிகர் மன்றம்.**

(IN/10250)(11,17)

## மரண அறிவித்தல்



தோற்றம் 22 . 12 . 1922

மறைவு 20 . 05 . 2019

### திருமதி இராசையா சரஸ்வதி

யாழ்ப்பாணம் 40/3, கோயில் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசையா சரஸ்வதி 20.05.2019 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் கனகலிங்கம், கமலாம்பாள் ஆகியோரின் பாசமிகு தாயாரும்ஜெயமனோகரியின்மாமியாரும்பிறேம்நாத், பிறேமலதா (கொலண்ட்), கோமலதா(ஜேர்மனி), யானகிலதா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.05.2019) செவ்வாய்க்கிழமை காலை 7.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப 10.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த இறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**கனகலிங்கம் (மகன்)**

## மரண அறிவித்தல்



### கந்தையா இராசு

திருநெல்வேலியைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இராசு நேற்று (20.05.2019) திங்கட்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

**210/1, சேர் பொன் இராமநாதன் வீதி.**
**யாழ்ப்பாணம்**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**0212221054**

## விற்பனைக்கு

- *புதிய எயர் கொண்டிஷன் ( AC) 12 BTU -7
- *புதிய கட்டில், மெத்தை queen Size - 6
- *ரெசிங் ரேபிள் (புதியது ) - 6
- *ஐஸ்கிறீம் மெசின் 8L (பாவித்தது)
- *காஸ் றைஸ் குக்கர் 10kg (பாவித்தது)
- *200 Honda 84 Sri (பாவித்தது)
- *மேசை 6 (புதியது)

**077 267 2888**

(CS/25451) (11.17)

## சிறுநீரகம் தேவை

இரு சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்ட நிலையிலுள்ள ஒருவருக்கு **0,A** வகைக் குருதியுடைய சிறுநீரகம் அவசரமாகத் தேவைப்படுகின்றது.

**077 779 4579,**
**077 419 6760**

## மரண அறிவித்தல்



தோற்றம் 13 . 07 . 1932

மறைவு 19 . 05 . 2019

### திருமதி இராசம்மா அப்பையா

புத்தூர் மேற்கைப் பிறப்பிடமாகவும், உடுவில், சங்குவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா அப்பையா 19.05.2019 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை-இலட்சுமி தம்பதியரின் இளைய மகளும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி செல்லப்பா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அப்பையாவின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான விஜயரட்ணம், இராசமலர், தர்மரட்ணம் மற்றும் ரஞ்ஜினி, ஜெயரட்ணம் (லண்டன்), குணரட்ணம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயா ரும், காலஞ்சென்றவர்களான சத்தியபாமா, சத்தியநாதன் மற்றும், ஜெயகௌரி, ஜெயபாலசுந்தரம், கெங்காதேவி, உதயகலா ஆகியோரின் அன்பு மாமியும், பிரசாந்தன், லேகாஜினி, சதீசன், கேசவன், மதிவதனி, தனபாலசிங்கம், நவநீ தன், தர்சனன், பிறேமினி, ஜெயந்தன், தயாளன், சுதர்சன், பிரேத்ஜி, தர்மிளா, ஜெயராசா, தட்சாயினி, நிதர்சன், கஜந், கீர்த்திகா, றொபி, சுஜீவன், வாகீசன், அபிநயா, வசீகன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், தஸ்விகா, பிரித்திகா, கிருஷ்ரி கன் (ஹரிஸ்) ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.05.2019) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கம்புலவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தல் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**டச்சு றோட், சங்குவேலி வடக்கு,**
**மானிப்பாய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

**077 358 6649, 077 326 5212**

## மரண அறிவித்தல்



மண்ணில் 13 . 07 . 1969

விண்ணில் 20 . 05 . 2019

### யோகலிங்கம் கேதீஸ்வரன் (M.Sc)

***வேம்படி, காரைநகர்***

*(ஆசிரியர் , காரைநகர் வியாவில் சைவ வித்தியாசாலை)*

காரைநகர் வேம்படியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டிருந்த யோகலிங்கம் கேதீஸ்வரன் 20.05.2019 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற யோகலிங்கம் (நீதிமன்ற பதிவாளர்) மற்றும் சரஸ்வதி(ஓய்வு பெற்ற காரைநகர் யாழ்ரன் கல்லூரி கனிஷ்ட பிரிவு அதிபர்) தம்பதிகளின் அன்பு மகனும் யோகேஸ்வரி (ஆசிரியை யாழ் முத்துத்தம்பி வித்தியாலயம்) இன் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான இரத்தினம் பரமேஸ்வரி (இரத்தினம் ரெக்ஸ்ரைல்ஸ், நெல்லியடி) தம்பதிகளின் அன்பு மருமகனும் ஸ்ரீநாராயணி, அபிராமி(வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவிகள்) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் மீனலோஜினி(லண்டன்), தர்மேஸ்வரன்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு அண்ணாவும் கணேசலிங்கம்(கனடா), சுந்தரலிங்கம்(இரத்தினம் ரெக்ஸ்ரைல்ஸ், நெல்லியடி), தியாகலிங்கம்(நோர்வே), சறோஜினிதேவி, விஜயலிங்கம்(கனடா), கிருபாகரன்(லண்டன்), சிவாஜினி(லண்டன்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் பூங்குலரூபி, சிவனேஸ்வரி, புஸ்பராணி, தர்மலிங்கம்(பிள்ளையார் ஸ்ரோர்ஸ், மல்லாவி), துஷ்யந்தினி ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 23.05.2019 வியாழக்கிழமை காலை 7.00 மணிக்கு வேம்படியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**வேம்படி,**
**காரைநகர்.**

(CS 24877)
(14,17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 310 5942 (மனைவி)/ 077 612 2435 (தாயார்)**

## மரண அறிவித்தல்கள்



மண்ணில் 03 . 04 . 1943

விண்ணில் 18 . 05 . 2019

# நாகமுத்து சண்முகலிங்கம்

உரும்பிராய் வடக்கு உரும்பிராயைப் (பலாலி வீதி) பிறப்பிடமாக வும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து சண்முகலிங்கம் 18.05.2019 சனிக்கிழமை காலமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - முத்தம்மா தம்பதி களின் மகனும், ராஜபூபதியின் அன்புக் கணவரும், பூபாலசிங்கம் பரிமளம், பரமலிங்கம், கமலாதேவி செல்வரட்ணம் (செல்லையா), காலஞ்சென்ற செல்வராணி ஆகியோரின் சகோதரரும், விஜிதா (ஜேர்மனி), றெஜினா(கனடா), சுதாகரன்(சுவிஸ்), ஐங்கரன்(ஜேர்மனி), அனுராகரன் (ஜேர்மனி) ஆகியோரின் தந்தையும், யோகராசா (ஜேர்மனி), தயாபரன் (கனடா), அகல்யா (சுவிஸ்), மயூரா (ஜேர்மனி), சுகன்யா (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக் கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

பலாலி வீதி,
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய். (CS/25603)(11,17)

தகவல்:
குடும்பத்தினர்.

0212241045, 0775015325



மண்ணில் 12 . 07 . 1986

விண்ணில் 19 . 05 . 2019

# முருகையா முகுந்தராஜ்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணத்தை வசிப் பிடமாகவும் கொண்ட முருகையா முகுந்தராஜ் 19.05.2019 ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் மாரிமுத்து முருகையா - முருகையா ஜீவராணி தம்பதிகளின் அன்புப் புதல்வரும், நீர்ஜிதாவின் (France) அன்புக் கணவரும், மு.மகேந்திர ராஜ் (AIA - முகாமையாளர்), மு.மோகன்ராஜ் (ஆசிரியர் - யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி), மு.ஸ ரீபன்ராஜ் (Micro Credit Officer - LOLC), மு.விமல்ராஜ் (வெளிக்கள உத்தியோகத்தர் - Soft Logic), மு.துவாரகா (BPO) ஆகியோரின் அன்புச் சகோதரரும், ம.கஸ்தூரி, ஸ்.கிருத்திகா (E-Soft), ஆகியோரின் மைத்துனரும், ம.பிரனீத்தின் அன்புச்சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.05.2019) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் ஒருமணியளவில் பூதவுடல் தகனக்கிரி யைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.30, பரியாரியார் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (CS/25499)(11,17)

தகவல்:
தாய், தந்தை, மனைவி,
சகோதரர்கள்.

077 241 4466, 077 209 5816

**கோழி இறைச்சிக் கடையும் வேலை ஆள்களும் தேவை**


கோழிப்பண்ணையில் வேலை செய்வ தற்கு ஆண்கள், பெண்கள் தேவை.
யாழ்ப்பாணத்தை அண்டிய பகுதியில் கோழி இறைச்சிக்கடை வாடகைக்கு தேவை.
குறிப்பு :
கோழி உரிக்கத் தெரிந்த ஆண்கள் தேவை.
தொடர்பு: 077 271 8149

**Spoken English & Sinhala**

அச்சுவேலி, இணுவில், நெல்லியடி, புத்தூர் ஆகிய இடங்களில் மாணவரின் தகுதிக்கு ஏற்ப அடிப்படையிலிருந்து எழுத, வாசிக்க, பேச்சுப் பயிற்சியுடன் மிகக் குறுகிய காலத்தில் கற்பிக்கப்படுகின்றது.
**தனியார் கல்வி நிலைய இயக்குநர்களும் தொடர்பு கொள்ளலாம்.**
Lect. Skb - மனோகரன்
077 725 4627

## மரண அறிவித்தல்கள்

# இராசேந்திரம் சிவஞானராஜா (சிவராசா)



பிறப்பு 22.03.1958 இறப்பு 17.05.2019

மூத்தவிநாயகர் வீதி, நல்லூரைப் பிறப் பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாக வும் கொண்ட இராசேந்திரம் சிவஞானராஜா (சிவராசா) 17.05.2019 வெள்ளிக்கிழமை இறைவனடிசேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான இராசேந்திரம் - பூரணம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவகுரு - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மருமகனும், தவலீலா (வனிதா)வின் அன்புக் கணவ ரும், டினேஸ், சபினா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சரஸ்வதி, சிவபாலு, அருள், ரவி (பிரான்ஸ்), மோகனா, வதனா (ஜேர்மனி), றெயினா (கனடா), சுதேந்திரா (C.C. விவசாய அமைச்சு), ராஜன் (லண்டன்), தர்சினி ஆகி யோரின் அன்புச் சகோதரரும், அழகேந்திரம், தவமலர், ராணி, சுபா (பிரான்ஸ்), தேவராசா, ராஜன் (ஜேர்மனி), சுதாகர் (கனடா), வசந்தன், வனிதா (லண்டன்), தயாபரன், சிவலீலா, சண்முகதாஸ் (பெல்ஜியம்), ஜெயலீலா, சிவதாஸ், தனலீலா (கொலண்ட்), மோகனதாஸ் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.05.2019) புதன்கிழமை ஜேர்மனியில் நடைபெறும். அன்று நண்பகல் 12 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற் றுக்கொள்ளவும்.

66/2, மூத்தவிநாயகர் வீதி,
நல்லூர். (CS/23879)(11,17)

தகவல் :
குடும்பத்தினர்.



பிறப்பு 16 . 06 . 1941

இறப்பு 19 . 05 . 2019

# நாகலிங்கம் சிவகுருநாதன்

*(முன்னாள் இ.போ.ச தொழில்நுட்ப உத்தியோகத்தர், கிளிநொச்சி)*

யாழ் திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி கனகபுரத்தை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வாழ்ந்து வந்தவருமாகிய நாகலிங்கம் சிவகுருநாதன் 19.05.2019 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை மரியமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும் புஸ்பராணி (கிளி)யின் பாசமிகு கணவரும் பாலமுரளி (S.B.S Automotive Bala), பாலதர்சினி (தர்சினி), பாலச்சந்திரன்(சந்திரன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சரோஜினி, தவராசா(ERRA Super Market), பவானி ஆகியோரின் அன்பு மாமனாரும் சரண், சாரூகன், கிரிஷன், பவிஷன், சிவராஜி, விஷ்ணு ஆகியோரின் அன்புப் பேரனும் நீலாயதாட்சி (கனடா), சண்முகலிங்கம்(கொழும்பு) காலஞ்சென்ற தியாகராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான இராஜகதிர்வேல், சாமிநாதர்(அப்பையா), மீனாட்சி, பிலோமினா(மணி) மற்றும் அன்னமலர்(மலர்), திரேசம்மா(சறோ), செல்வநாயகம்(ஜெயம்), நாகம்மா, திரவியமலர்(பவா), லோகேஸ்வரி(சின்னமணி) ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் நடராசா, பிரான்சிஸ்சேவியர் மற்றும் காமாட்சிப்பிள்ளை, மரியநாயகம், மஞ்சுளா ஆகியோரின் அன்புச் சகலனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக இன்று (21.05.2019) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் நண்பகல் 12.00 மணி வரை இல.117, 11ஆம் பண்ணை கனகபுரத்தில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகளுக்காக கனடாவிற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மனவருத்தத்துடன் அறியத்தருகின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.
சு.விஜயகுமார் (பெறாமகன்)
உதவி விவசாயப் பணிப்பாளர், கிளிநொச்சி.
077 651 2373

(CS 24877)
(14,17)

பாலமுரளி (மகன்) 416 560 9472 / சந்திரன் (மகன்) 416 346 3804 /
செல்வன் (மருமகன்) 416 897 8110

## மரண அறிவித்தல்கள்



### திருமதி இராசம்மா கனகரத்தினம்


கச்சாய் வீதி கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா கனகரத்தினம் கடந்த (18.05.2019) சனிக்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி கதிர்காமர் முத்துப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற திரு. திருமதி வல்லிபுரம் முத்துப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற வல்லிபுரம் கனகரத்தினம் (CTB) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் தங்கம்மா, இராசையா, நல்லம்மா, மகேஸ்வரிப்பிள்ளை, யோகராசா (கனடா) ஆகியோரின் அன்புச்சகோதரியும் கோமளா (ஆசிரியை. யா/இராமநாதன் கல்லூரி), சியாமளா (நோர்வே) நரேந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தாயாரும் இரவீந்திரன் (அதிபர், யா/போக்கட்டி றோமன் கத்தோலிக் பாடசாலை), மனோகரன் (நோர்வே), தவராசினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் ரேகிஷன், ரேஷிகா.ஜனார்த்தனன், ஜானுஷா, மனுஷா, நர்த்தனா, வித்தகன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் பொன்னம்மா காலஞ்சென்ற அமிர்தலிங்கம் மற்றும் மனோன்மணி, காலஞ்சென்ற வேதாரணியம் மற்றும் சண்முகலிங்கம், வசுந்தராதேவி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.05.2019) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று மு.ப 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக பாலவித்தாள் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கச்சாய் வீதி, கொடிகாமம்**
**077 653 0382**

தகவல்: குடும்பத்தினர்



பிறப்பு 20.05.1929

இறப்பு 20.05.2019

### கந்தர் வேலாயுதம்

கோப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தர் வேலாயுதம் நேற்று (20.05.2019) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தர் - சின்னாச்சி தம்பதிகளின் மகனும், காலஞ்சென்றவர்களான வைரமுத்து - நாகம்மா தம்பதிகளின் மருமகனும், பத்மாவதியின் அன்புக் கணவரும், பத்மராசன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), பத்மநாதன் (செல்லகிளி ஸ்ரோர்ஸ்), ஜெகதீஸ்வரன் (மோகன்), நாகபூசனி, இரத்தினபாலன் (ஆசிரியர், நவக்கிரி, அமெரிக்கன் மிசன், பாடசாலை), ரஜனி (ஜேர்மனி), பவானி, ரவீந்திரன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், கட்டடத் திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பராசக்தி, சரோஜினிதேவி, சரோஜினி (கல்யாணி), காலஞ்சென்ற ஞானப்பிரகாசம் மற்றும் பரமவதி (ஆசிரியை, அச்சுவேலி ஆரம்ப பாடசாலை), கந்தசாமி (ஜேர்மனி), வன்னியசிங்கம் (பிரதேச செயலகம், கோப்பாய்), ரமணி (கமநல அபிவிருத்தி, உடுவில்) ஆகியோரின் அன்பு மாமனாரும், டினேஸ்குமார் (அரச நில அளவையாளர், வவுனியா), சதீஸ்குமார் (மாகா, குருநாகல்) - சிந்துஜா (சமுர்த்தி உத்தியோகத்தர்), பிரணவன் (CESL , கிளிநொச்சி), அபிராம், திருவரங்கன் (BPPE Supervisor), ஜீவிதா, கோபிசங்கர், லோஜிக்கா (ஜேர்மனி), கேதாரணி (பல்கலைக்கழகம், கிளிநொச்சி), நிதியா (மொறட்டுவ பல்கலைக்கழகம்), கோபிகா (கனடா), சஞ்சிகா (ஆசிரியர், முசலி, மன்னார்), வாரணன், வாரகி, சுதர்சன், சுஜிந்தன், கார்த்திகா (ஆஸ்திரேலியா), வர்சிகா, நிதுசன், நிருபா, நிருசிகா ஆகியோரின் பாசமிகு பேரனும், ஜெனுலி, மிதுலி, ஆதுசா, ஆரலி, லவுரா (ஜேர்மனி), லிதிஷா (கனடா) ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.05.2019) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில்நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2 மணியளவில் கோப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கிழுவானை லேன்,**
**கோப்பாய் மத்தி, கோப்பாய்.**

(cs/25496)(11,17)

தகவல்:
குடும்பத்தினர்.

**077 4737702**

உதயன்

விளம்பர தொடர்புகளுக்கு

advt@uthayan.com

வேலையாள்கள் தேவை

01. கொப்பறா மில் வேலை தெரிந்த (ஆண்/பெண்)

02. பொதிசெய்யும் பெண்கள்

இல.104 மாப்பியன் மில் வீதி, சுதுமலை
076 144 9918

## மரண அறிவித்தல்கள்

### பரமு சபாரத்தினம் (பத்தர்)



பிறப்பு 14.07.1939

இறப்பு 18.05.2019

சாவகச்சேரி, சங்கத்தானையைப் பிறப்பிடமாகவும், பருத்தித்துறை, கொழும்பு ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் தற்போது திருகோணமலையில் வசித்து வந்தவருமான பரமு சபாரத்தினம் (பத்தர்) 18.05.2019 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் பரமு (பத்தர்) பூரணம் தம்பதிகளின் அன்பு மகனும், அருந்ததியின் பாசமிகு கணவரும், பவானி, ரட்னராஜ், ஜெயந்தி, வசந்தி, சிறிதரன், வாசுகி, வாசுதேவன், கௌரி ஆகியோரின் அன்புத் தந்தையும், சரஸ்வதியின் சகோதரரும், பாலசந்திரன், ஜெனார்த்தனன், சிவகுமார், ரவிச்சந்திரன், சுஜித்குமார் கிறிஸ்டா, அருட்செல்வி ஆகியோரின் மாமனாரும், றாஜி, ரேகா, லெயோன், யூலி, ஜெனனி, மயூராகவன், மயூரன், செந்தூரன், கீர்த்தி, ரஞ்சித், சஞ்சிவ், வாகீசன், தேஜாஸ், மாதேஷ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 23.05.2019 வியாழக்கிழமை திருகோணமலையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**558, கதிர்காமத்தம்பி வீதி,**
**திருகோணமலை.**

(CS/23879)(11,17)

தகவல் :
சிறி குடும்பம் (மகன்)

**0033 621 238725, 076 7111993**

### சாவு ஒரு வாழ்வு



தோற்றம் 06.02.1911

மறைவு 19.05.2019

### லூயீசா அருளம்மா தம்பிராசா

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் முரசுமோட்டை இரண்டாம் கட்டை நவஜீவனத்தில் வசித்தவருமாகிய திருமதி லூயீசா அருளம்மா தம்பிராசா (பேர்தகர் அம்மா) 19.05.2019 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் நவஜீவனபாதா கனம் காலஞ்சென்ற ஏ.சி.தம்பிராசாவின் அன்புத் துணையும் அருள்ராசா (கனடா), அருட்பணி சத்தியராசா (சத்தி தம்பிராசா, இளைப்பாறிய மெதடிஸ்த அருட்பணியாளர்), காலஞ்சென்ற பாக்கியராசா, பிறேமராசா (கனடா), தீபராசா (கனடா) காலஞ்சென்ற கிருபானந்தராசா (இயக்குநர் நவஜீவனம்), குருகுலராசா (முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர்), திருராசா (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற பத்மினி, கிறிஸ்டல் (கனடா), டொறிஸ் (கொழும்பு), பியூலா (கனடா), ராணி (கனடா), மனோரஞ்சினி (றஞ்சி அக்கா), நவஜீவனம், சித்திரா (கானான்), லின்டா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (22.05.2019) புதன்கிழமை மு.ப 10.30 மணியளவில் முரசுமோட்டை நவஜீவன புனித சிற்பாசாரி ஆலயத்தில் வைக்கப்பட்டு இறுதிச்சடங்கு மாலை 3.00 மணிக்கு நடைபெற்று மாலை 5.00 மணியளவில் முதலாம் கட்டை (1ஆம் கட்டை) பரந்தன் கல்லறைத் தோட்டத்தில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், நவஜீவன அன்பர்கள், நவஜீவன பழைய மாணவர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(AKN 721)
(14,17)

தகவல்: குடும்பத்தினர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**த.சரத்பாபு**
*(Dip.in.Teach, B.A, PGDE, PGD in Special Needs Edu, M.A (Edu)*

எமது பாடசாலையின் ஆசிரியர் **தங்கவேலாயுதம் சரத்பாபு** அவர்கள் **24.04.2019** அன்று **யாழ்ப்பாணம் மேல்நீதிமன்ற நீதிபதி அ.பிரேம்சங்கர்** முன்னிலையில் அகில இலங்கை **சமாதான நீதவானாக** சத்தியப் பிரமாணம் செய்தமையையிட்டுப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர் :- ஆசிரியர் நலன்புரிக்கழகம்.**
**யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி.**

(S25486(11.17)

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம்:3185 | திகதி: 2019.05.20 | திங்கட்கிழமை | நீலம்

வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 26 | 32 | 44 | 51 | B
போனஸ் இலக்கம்: 69
அடுத்த புதன்கிழமைக்கான ஜக்பொட்: 43,071,950/-

Web: www.dlb.lk — 0114 824 824, 0112 333 778

## அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 614
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2019.05.20
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 52,587,920/-

வெற்றி இலக்கங்கள்: 06 28 48 70 — ஆங்கில எழுத்து: P

Web: www.dlb.lk — 0114 824 824, 0112 333 778

## வேலைவாய்ப்பு

**கிளிநொச்சியில் அமைந்துள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் பின்வரும் வெற்றிடங்களுக்குத் தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.**

- உதவி முகாமையாளர் (30,000 முதல்)
- நீர் மற்றும் மின்சார பராமரிப்பாளர் (25,000 முதல்)
- உதவி சமையலாளர் (பேக்கரி வேலை தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது. - 30,000 முதல்)
- அறைகள் பராமரிப்பாளர் (20,000 முதல்)

**உணவு, மருத்துவம், தங்குமிடம் இலவசமாக வழங்கப்படும்.**

**077 760 4667**

(ARN25393)(11.17)

## கண்ணீர் அஞ்சலி




**கு.ரவிந்திரனின்**
பாசமிகு மாமியாரும்
**திருமதி**
**கோமளா ரவிந்திரனின்**
அன்புத் தாயாருமான
**திருமதி இராசம்மா கனகரத்தினம்**
அவர்களின் மறைவுச் செய்தியறிந்து துயரடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(C 10249)(14.17)

**யா/ போக்கட்டி றோ.க.த.க பாடசாலை ஆசிரியர்கள்**

## மரண அறிவித்தல்

## மருசலீன் சகாயநேசன்



பிறப்பு 23.09.1970 — இறப்பு 19.05.2019

பெரியபாண்டிவிரிச்சனை பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மருசலீன் சகாய நேசன் (19.05.2019) ஞாயிற்றுக் கிழமை அகாலமரண மடைந்துள்ளார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 21.05.2019 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது' இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

# மகத்ததான மூன்றுகள்



1. மதிக்க வேண்டியவை - மூத்தோர், மார்க்கம், சட்டம்
2. நோக்க வேண்டியவை - நேர்மை,தூய்மை, கடின உழைப்பு
3. போற்ற வேண்டியவை - அறிவு, அழகு, அன்பு
4. பேண வேண்டியவை - திருப்தி, தைரியம், மகிழ்ச்சி
5. தவிர்க்க வேண்டியவை - புகைத்தல்,சூதாடல்,மதுவருந்துதல்'
6. அடக்க வேண்டியவை - நா, கோபம், சோதனை
7. பாதுகாக்க வேண்டியவை - வாக்குறுதி, நட்பு, அன்பு
8. அஞ்ச வேண்டியவை - களவு, கொலை, பொய்
9. ஒழிக்க வேண்டியவை - பொறாமை, அநீதி, வாக்கு மீறல்
10. எதிர்கொள்ள வேண்டியவை - கவலை, பயம், சாவு
11. கவனிக்க வேண்டியவை - பேச்சு, செயல், எண்ணம்
12. போரிட வேண்டியவை - தேச விடுதலை, உரிமை கோரல், கண்ணியம் காக்க

# விடுகதைகள்

1. இளமையில் பச்சை, முதுமையில் சிகப்பு, குணத்திலே எரிப்பு அது என்ன?
2. எவ்வளவு ஓடினாலும் எனக்கு வியர்வை வராது. வீட்டில் அன்பாய் வளரும் என்னை திருடனுக்குப் பிடிக்காது அது என்ன?
3. பதினாறு மணி நேரம் தூங்கி மகிழும் நான் அழுதால் சிறிய குழந்தை அழுகிறதோ என்று ஏமாறும் தாய்மார்கள் ஏராளம் அது என்ன?
4. மழையில் நனைந்து, வெயிலில் காய்ந்து பிடித்திருப்பவர்களைக் காப்பாற்றும் என்னை இந்த இளம் பெண்கள் அழகுக்காகப் பிடித்துக் கொள்கிறார்கள் அது என்ன?
5. என் வீட்டை நானே தூக்கிச் சுமந்து செல்வதால்தான் என்னைக் காப்பாற்றிக் கொள்ள முடிகிறது அது என்ன?
6. இறக்கை இருந்தும் என்னால் பறக்க முடியாது. இருந்தாலும் என் ஓட்டத்தைப் பிடிக்க எவராலும் முடியாது அது என்ன?
7. நீரிலும் வாழ்வேன், நிலத்திலும் வாழ்வேன். நீண்ட ஆயுள் உடைய எனக்கு இறைவன் கொடுத்த கவசமும் இருக்கு அது என்ன?
8. உயிரைக் காக்கும் தானம். புண்ணியம் தரும் தானம். ஆபத்தில் இருப்பவருக்குத்தான் தெரியும் இதன் மதிப்பு அது என்ன?
9. சுவையை உணர வைக்கும் என்னுடைய பேச்சால் பயனடைந்தவர்களும் உண்டு பாதிப்படைந்தவர்களும் உண்டு அது என்ன?
10. முடிவுக்கு முன்பே முந்திக் கொள்ளும் மனிதர்களை என்பெயரைச்சொல்லித்தான் அழைக்கிறார்கள் அது என்ன?

## விடைகள்

1. மிளகாய்.
2. நாய்.
3. பூனை.
4. குடை.
5. நத்தை.
6. நெருப்புக்கோழி.
7. ஆமை.
8. குருதித் தானம்.
9. நாக்கு.
10. முந்திரிக் கொட்டை.

## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம்: 1570 | சீட்டிழுப்பு திகதி: 20.05.2019

வெற்றி இலக்கங்கள்: 17 19 39 51 — ஆங்கில எழுத்து: D

அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட் ரூ.31, 184, 840 /=

## கண்ணீர் அஞ்சலி



**திருமதி மனோன்மணி பாலசிங்கம்**

எமது ஆலயத்தின் சங்காபிஷேக உபயகாரரும் ஆலயத்துக்கு அறப்பணிகளை ஆற்றிவருபவருமாகிய பாலசிங்கம் சிவபாதம் அவர்களின் அன்புத் தாயார் லண்டனில் காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வெள்ளைப் புற்றடி விநாயகனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

**வெள்ளைப்புற்றடி விநாயகர் ஆலயம், மணகும்பான். — பரிபாலனசபை.**

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆங்கில பாட ஆசிரியர்
**திருமதி**
**காயத்திரி பிரபாகரன்**
அவர்களின் அன்பு மாமியார்
**திருமதி கனகசபை மகிழமணி**
அவர்கள் 16.05.2019 அன்று காலமானதையிட்டு அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

(C 10246)(14.17)

**பாடசாலை ஆசிரியர் நலன்புரிச்சங்கம்**
**யா/ மிருசுவில் றோ.க.த.க பாடசாலை**

## தவறிவிட்டது

திருநெல்வேலி சந்திக்கும் கந்தர்மடச் சந்திக்குமிடையில் கணேசப்பிரபு நாகேந்திரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (195336203107) தவறிவிட்டது. **தொடர்பு - 076 982 7977**


## தவறி விட்டது

வேலுச்சாமி ஆறுமுகம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (712994673 V), வாகன சாரதி அனுமதிப்பத்திரம் (B613034) சிறுதொகைப் பணம் என்பன உள்ளடங்கிய பேர்ஸ் மட்டுவிலிருக்கும் மீசாலை சோலை அம்மன் கோயிலுக்கும் இடையில் 18.05.2019 சனிக்கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**தொடர்பு: 077 639 3717**
**077 305 6600**

(C3 0062904.17)

# தீயவர்களுக்கு உதவி செய்தால் துன்பமே கிடைக்கும்




அது ஒரு அழகிய குளிர்காலம். ஒரு நாள் நாகம் ஒன்று பனியில் விறைத்து உயிர் போய் விடுமோ என்ற நிலையில் சுருண்டு கிடந்தது.

அந்த நேரத்தில் அவ்வழியே வந்த அரசன் அந்த நாகத்தைப் பார்த்தான். இரக்க குணமுள்ளஅந்த அரசன் அந்த நாகத்துக்கு உதவிட நினைத்தான். நாகத்தை எடுத்து தன் மார்போடு அணைத்து அதனைச் சூடேற்றினான். அரசனின் உடல் சூடுபட்டதும் நாகம் மெல்ல மெல்ல உணர்வு பெற்றது.

அதற்கு நன்றாக உணர்வு வந்ததும் அது தன்னைக் காப்பாற்றிய அரசனைப் பலமாகக் கடித்து விட்டது. நாகத்தின் நஞ்சு ஏறி உயிர்போகும் நிலையில் இருந்த அந்த அரசன் தன் செய்கைக்காக வருந்தினான்.

நாகத்தைப் பார்த்து "ஏ நன்றி கெட்ட நாகமே! உன்னைக் காப்பாற்றிய என்னையே கடித்து விட்டாயே! உன் குணம் தெரிந்தும் நான் உனக்கு உதவி செய்தேன் அல்லவா?அதற்கு இது சரியான தண்டனை தான் என்று கூறி விட்டு இறந்தான்.




சிறுவர்களுக்குரிய சரியான கார்களை இணையுங்கள்

1985ம் ஆண்டிலிருந்து இன்று வரையானதொரு
தனித்துவமிக்க பயிற்சி நிலையம்
யாழ். கலாலயா பயிற்சியகம்
இலங்கையின் மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி
ஆணையத்தால் பதிவு செய்யப்பட்ட பயிற்சி நிலையம்



விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம். (யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

**மகளிருக்கான பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**

- FACIALS (முக அழகுக்கலை) Pedicure, Manicure, Nail Art, கண் புருவம் சீராக்குதல் (Eye Brow Threading), தேவையற்ற முடிகளைஅகற்றுதல் (Waxing)
- கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும் 40 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், முடி சுருட்டுதல், Hair Colouring, முடி வெட்டுதல், Hair Perming.
- BRIDAL DRESSINGS (மணப்பெண் அலங்காரங்கள்) இந்து, கிறிஸ்தவ இஸ்லாம் மணப் பெண் அலங்காரமும் Modern, கூர்க்காஸ், சிங்கப்பூர் குஜராத்தி, மடிசார், சிங்கள முறையிலான சேலை அணியும் முறைகள். முறைகளும் பயிற்றுவிக்கப்படும்.
- கேக் ஐசிங் – றோயல், Parchment, Frosting, Fondant, Whipping Cream, Piping Icing, மாச்சீனி மலர்கள். (Sugar Flowers).
- உணவு தயாரித்தல் - உணவு வகைகள், 6 வகையான Cakes, Cup Cake மற்றும் பீஸா, சிற்றுண்டிகள் குளிர்பானங் கள், ஐஸ் கிறீம், புடிங் தயாரித்தல்.



**பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

- அத்துடன் பிளவ்ஸ், சாறி பிளவ்ஸ், சுரிதார், மற்றும் ஆடைகள் தைக்கும் சான்றிதழ் அற்ற கிழமை நாள் தையல் பயிற்சிகளும் ஆரம்பமாகின்றன.

**கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம்**
**29.05.2019 புதன் காலை 10.00 மணி**
**சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம்**
**01.06.2019 சனி காலை 10.00மணி**

மேலும் விபரங்களை பி.ப 5.30 வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.

-இயக்குநர்-

Guru

## மரண அறிவித்தல்

## திருமதி செல்லம்மா வேலுப்பிள்ளை



தோற்றம் 18.02.1927 மறைவு 17.05.2019

அச்சுவேலி தெற்கு தோப்பை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா வேலுப்பிள்ளை கடந்த (17.05.2019) வெள்ளிக்கிழமை காலமானார்.


அன்னார்காலஞ்சென்ற நாராயணபிள்ளை நாகமுத்து தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தையா தங்கம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் வேலுப்பிள்ளையின் பாசமிகு மனைவியும் பத்மாவதி (கனடா), சிவஞானம் , சிவசோதி (கனடா), பத்மலோஜினி (கனடா), ஆகியோரின் அன்புத்தாயாரும் தங்கவேலாயுதம் (கனடா), சத்தியதேவி, சுபத்திரா, கிருஷ்ணகுமார் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி, செல்லமுத்து, கந்தையா, ஐயக்குட்டி, தங்கச்சிப்பிள்ளை மற்றும் செல்லாச்சிப்பிள்ளை (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.05.2019) செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தோப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**போதிப்பிள்ளையார் கோயில் வீதி,**
**தோப்பு, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# கோப்பி குடிக்கும் பழக்கம்



கோப்பிப்பானம் அறிமுகமான கதை மிகவும் சுவையானது. அராபிய நாட்டில் கால்தி என்ற ஆட்டிடையன்ஒருவிசித்திரமான காட்சி ஒன்றைக் கண்டான். அவனுடைய ஆடுகள் ஒரு வெழுமையான செடியின் இலைகளை மென்று தின்றதும் துள்ளி ஓடின. வயதான ஆடுகளும் கூட அதனைத் தின்றதும் துள்ளிக் குதித்தன. அந்தச் செடியில் அப்படி என்ன இருக்கிறது என்பதைச் சோதனை செய்யும் நோக்குடன் அவன் அந்த மரத்தின் சிவப்புப் பழங்களைப் பறித்துத் தின்றான். மறுகணமே அவனுடலில் இனம் தெரியாத தெம்பும் உற்சாகமும் வந்து புகுந்ததை உணர்ந்தான். அவன் இது பற்றி 'ஆபோர்ட்'என்ற குருவிடம் கூற அவர் அந்த சிவப்பு பழத்தின் விதைகளைப் பொடி செய்து நீருடன் கலந்து பலருக்கு அருந்தக் கொடுத்தார். அதன் பின்னர் அறிமுகமான விந்தையான இந்த விதையே கோப்பிக் கொட்டையாகும். இது உண்மைச் சம்பவமா இல்லையா என்பது தெரியாது. ஆனால் பண்டைக் காலத்திலிருந்தே அரேபியர்கள் கோப்பி குடித்து வந்தார்கள் எனத் தெரிகிறது. இங்கிலாந்தில் கோப்பி குடிக்கும் பழக்கம் 19ஆம் நூற்றாண்டில் ஆரம்பமாகியது. ஒரு கோப்பை கோப்பியில் 120 மில்லிக்கிராம் காஃபின் என்ற உடல் நலத்துக்கு தீங்கு தரும் பொருள்கள் அடங்கியுள்ளது.

## தேடலின் முடிவுகள்...



காதலின் தேடல் இளமையில்...
அன்பின் தேடல் முதுமையில்...
வாழ்கையின் தேடல் எளிமையில்...
பதவியின் தேடல் தலைமையில்...
இன்பத்தின் தேடல் பன்மையில்...
துன்பத்தின் தேடல் பொருமையில்...
சந்தோஷத்தின் தேடல் பெருமையில்...
கோபத்தின் தேடல் வன்மையில்...
வெற்றியின் தேடல் வலிமையில்...
தோல்வியின் தேடல் வெறுமையில்...
உண்மையின் தேடல் பொய்மையில்...
பொய்யான தேடல் உண்மையில்... முடிந்தது.
அன்பு தேடலிலே நிறைவாகிறது.
வாழ்வின் வசந்தங்கள்...!



# பிக்பாஸ்-03 ஜூன் மாதத்தில் ஆரம்பம்

தொலைக்காட்சி ரசிகர்களை மிகவும் கவர்ந்த நிகழ்ச்சி பிக்பாஸ். இரண்டு சீசன்கள் முடிந்துள்ள நிலையில் தற்போது மூன்றாவது சீசனுக்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. இந்த சீசனையும் கமல்ஹாசன் தான் தொகுத்து வழங்கவுள்ளார். வரும் ஜூன் மாதத்தில் ஆரம்பமாக உள்ள நிகழ்ச்சியில் கலந்து கொள்ளவுள்ள போட்டியாளர்களின் பெயர் பட்டியல் ஒன்று சமூக வலைத்தளத்தில் வைரலாகி வருகிறது.

## இதோ அந்தப் பட்டியல்...

மிர்னாலினி
சாந்தினி
கஸ்தூரி
விசித்ரா
விஜே ரம்யா
பூனம் பாஜ்வா
ரமேஷ் திலக்
சரண் ஷக்தி
பாலாஜி முருகதாஸ்
ஜாங்கிரி மதுமிதா
கிரிஷ்






















## இது புதுசு



குழந்தைகள் சுவரில் கலர் பென்சில்களால் எழுதினாலோ, சுவரில் அழுக்குகள் படிந்திருந்தாலோ இலகுவாக நீக்கக் கூடிய கண்ணாடிகளை இலகுவாக சுத்தம் செய்யக் கூடிய துடைப்பங்கள் அறிமுகமாகியுள்ளன. இவை 50 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

# ஹேமசிறி, பூஜித் மீது விரைவில் விசாரணை

## சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவிப்பு

கொழும்பு, மே 21

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்களைத் தடுக்கத் தவறினர் என்ற குற்றச்சாட்டுத் தொடர்பாக, முன்னாள் பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்னான்டோ, கட்டாய விடுப்பில் அனுப்பப்பட்டுள்ள பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகியோருக்கு எதிராக விசாரணை நடத்தப்படவுள்ளது.

இவர்களுக்கு எதிராகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணை நடத்த வேண்டும் என்று சட்டமா அதிபர் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

தேவாலயங்களில் இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புகள் குண்டுத் தாக்குதலை நடத்த திட்டமிட்டுள்ளதாக, முன்னரே வழங்கப்பட்ட எச்சரிக்கைகள் விடயத்தில் உயர் அதிகாரிகளாக இருந்த இவர்கள், நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டனர் என்று குற்றம்சாட்டப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் இவர்கள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு விரைவில் அழைக்கப்பட்டு விசாரணை செய்யப்படவுள்ளனர்.

இவர்கள் மீது குற்றவியல் வழக்குத் தாக்கல் செய்யப்படும் வாய்ப்புகள் இருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பொறுப்பை நிறைவேற்றத் தவறினர் என்று குற்றஞ்சாட்டி அரசதலைவர் இருவரையும் பொறுப்பிலிருந்து நீக்கியிருந்தார். எனினும் பொலிஸ்மா அதிபர் தன்னில் தவறில்லை என்றுகூறியுள்ளார். (த)

## கல்வி அமைச்சின் பெயரை சீர்குலைக்கச் சிலர் முயற்சி

### அமைச்சர் அகிலவிராஜ் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மே 21

கல்வி அமைச்சின் பெயரைச் சீர் குலைப்பதற்கு சிலர் முயற்சிக்கின்றனர் என்று கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக விடுத்துள்ள சிறப்பு அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் உள்ளதாவது:

ஆணைக்குழுக்களின் பெயரில் எனது அரசியல் தோற்றத்தைத் தகர்ப்பதற்கான எடுக்கப்படும் முயற்சி பெரும் அவமானத்திற்குரியவை. ஒரு சில தனிநபர்கள் மற்றும் குழுக்கள், கல்வி அமைச்சால் முன்னெடுக்கப்படும் மக்கள் திட்டங்களை ஆணை க்குழுவின் பெயரில் தள்ளி இல்லாமல் செய்ய சதி செய்கின்றனர். எனது அரசியல் தோற்றத்தையும் கல்வி அமைச்சின் நாமத்தைச் சீர்குலைக்க முயற்சி செய்கின்றனர்.

மாணவர்களுக்கான காப்பீடு திட்டமான சுரக்சா காப்புறுதி தொடர்பில் போலியான தகவல்களை வெளியிட்டு மக்களின் கவனத்தைத் திருப்ப பார்கின்றனர்.

"சுரக்சா" காப்புறுதி தொடர்பான அரச நிதிய பணத்தை நானும் கபீர் ஹசீமும் மோசடி செய்துள்ளோம் என்று ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்படுள்ளது. இது முற்றிலும் அரசியல் இலாபத்துக்காக முன்னெடுக்கப்படும் பரப்புரையாகும். 2017 - 2018 ஆண்டு வரையான சுரக்சா காப்பீடுக்கான ஒப்பந்தத்தின் படி இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் பணத்தில் 2 ஆயிரத்து 100 மில்லியன் ரூபா வெளிநாட்டு நிறுவனத்தில் மறுகாப்பீட்டு செய்யப்பட்டமைக்கும் கல்வி அமைச்சுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என பொறுப்புடன் கூறுகின்றேன். என்றுள்ளது. (எ-7)

## தோட்டத்தில் மயங்கி விழுந்து குடும்பத்தலைவர் உயிரிழப்பு

முல்லைத்தீவு, மே 21

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான், சின்னச்சாளம்பனில் ஒருவர் மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார். கச்சான் தோட்டத்துக்கு நீர் பாய்ச்சிக் கொண்டிருந்த போதே அவர் மயங்கி வீழ்ந்துள்ளார். இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை நடந்துள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த செ.சிவானந்தம் (வயது47) என்ற குடும்பத் தலைவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் கஞ்சான் தோட்டத்துக்கு நீர் இறைக்கச் சென்றிருந்த நிலையில், உறவினர்கள் தேநீர் கொண்டு சென்றுள்ளனர். அப்போது அவர் மயங்கி வீழ்ந்த நிலையில் இருந்துள்ளார். உடனடியாக நோயாளர் காவு வண்டிக்கு அறிவிக்கப்பட்டு ஒட்டுசுட்டான் மருத்துவமனைக்கு அவர் கொண்டு செல்லப்பட்டுள்ளார். எனினும் அவர் உயிரிழந்தார்.

உடற்கூற்றுச் சோதனைகளின் பின்னர் உடல் கடந்த சனிக்கிழமை உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (எ-ரி3)

## திடீரென மூச்சுத் திணறி குடும்பத் தலைவர் சாவு

கொடிகாமம், மே 21

வீட்டில் இருந்த குடும்பத்தலைவர் ஒருவர் திடீரென மூச்சுத் திணறி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் சாவகச்சேரி, தனங்கிளப்பில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடந்துள்ளது. சு.சுரேந்திரன் (வயது45) என்ற குடும்பத் தலைவரே உயிரிழந்துள்ளார்.

வீட்டில் இருந்தபோது அவருக்குத் திடீரென மூச்சுத் திணறல் ஏற்பட்டது என்றும், அவர் உடனடியாக சாவகச்சேரி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டபோது, அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவர்கள் உறுதிப்படுத்தினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாகச் சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்தனர். அறிக்கையைப் பார்வையிட்ட சாவகச்சேரிப் பதில் நீதிவான் பிரதேச திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஊடாக விசாரணை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார்.

தென்மராட்சிப் பிரதேச திடீர் இறப்பு விசாரணை அதிகாரி திருமதி சி.தவமலர் சடலத்தைப் பார்வையிட்டு உடற்கூற்றுச் சோதனையைச் சட்ட வைத்திய அதிகாரி மூலம் மேற்கொண்டு உடலை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (ஏ-159)

## முக்கிய செயற்பாடுகளுக்கு வெளிநாடுகள் அழுத்தம்

### எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

கொழும்பு, மே 21

அரசின் முக்கிய செயற்பாடுகளுக்கு வெளிநாட்டு அழுத்தங்கள் அதிகளவு பிரயோகிக்கப்படுகின்றன என்று எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ச குற்றம் சுமத்தியுள்ளார்.

நாரஹேன்பிட்டவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மத நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவிக்கும்போதே மகிந்த ராஜபக்ச இதனைத் தெரிவித்தார்.

போர் நிறைவடைந்து 10 வருடங்கள் கடந்த பின்னர் பயங்கரவாதம் தோன்றியமைக்கான காரணத்தைக் கண்டறிந்து தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

பன்னாட்டின் நோக்கங்களை நிறைவேற்றும் வகையிலேயே இந்த அரசு தொடர்ச்சியாகச் செயற்பட்டு வருகின்றது. இதனாலேயே நல்லாட்சி அரசு ஆட்சிக்கு வந்த காலத்திலிருந்து, இலங்கை முப்படையினருக்கு எதிரான செயற்பாடுகளை தொட ர்ந்து மேற்கொண்டது என்று அவர் மேலும் தெரிவித்தார். (த)

## பயங்கரவாதக் குழுவுக்கு வெளிநாடுகளிலிருந்து நிதி

### விசாரணைகளில் அம்பலம்

கொழும்பு, மே 21

இஸ்லாமியப் பயங்கரவாதக் குழுவுக்கு வெளிநாடுகளிலிருந்து பெரும் தொகை நிதி வழங்கப்பட்டுள்ளமை ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களை அடுத்து நடத்தப்பட்ட விசாரணைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்பட்ட பெருமளவிலான நிதிகள் பயங்கரவாதிகள் மற்றும் தற்கொலைக் குண்டுதாரிகளின் வங்கி கணக்குகளில் வைப்பிலிடப்பட்டுள்ளன என்று கிடைக்கப்பெற்ற தகவல்களின் மூலம் அறியமுடிகின்றது.

வெளிநாட்டு நிதி உதவிகள் குறித்து முழுமையான தகவல்களைப் பெற்றுக் கொள்ள அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். நிதியுதவி வழங்கிய நாடுகளின் பெயர்களைப் பொலிஸார் இதுவரை வெளிப்படுத்தவில்லை.

அண்மையில் வெளியான தகவல்கள் ஊடக இலங்கைக்கு தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்த ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு நிதி வழங்கியதாகத் தகவல்கள் வெளியாகின. இந்தத் தாக்குதலுக்கு முன்னர் டொலர்கள் என்ற பெயரில் நாணயத்தை மாற்றுவதாக தகவல் கிடைத்ததாக வை ட்ஸ்ட்ரீம் நிறுவ னத்தின் இணை நிறுவனர் இஷ்டிக் லெவி தெரிவித்திருந்தார்.

பணபரிவர்தனைகள் அனைத்தும் ஒரு பிரத்தியேக வலைத்தளத்தின் ஊடாகவே செய்யப்பட்டுள்ளன. ஆனால் உலக நாடுகள் கண்காணிப்பதை தடுக்க டொமைன் முகவரி அடிக்கடி மாற்றப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## கள் விற்பனை நிலையத்துக்கு அடிக்கல்

கிளிநொச்சி, மே 21

பச்சிலைப்பள்ளி பனை தென்னை அபிவிருத்தி சங்கத்தின் நவீன முறையிலான கள் விற்பனை நிலைய கட்டடத்துக்கான அடிக்கல் அண்மையில் நடப்பட்டது. அடிக்கல்லை நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நட்டு வைத்தார்.

நிகழ்வில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தவிசாளர் சுரேன் சுப்பிரமணியம், உபதவிசாளர் மு.கஜன், கூட்டுறவு உதவி ஆணையாளர், பச்சிலைப்பள்ளியின் உறுப்பினர்கள் பனை தென்னை அபிவிருத்திச் சங்கத்தின் நிர்வாக உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஜ-6,222)

# தெல்லிப்பழையில் முதியோர் இல்லம்

யாழ்ப்பாணம், மே 21

தெல்லிப்பழையிலும் முதியோர் இல்லம் ஒன்றுநேற்றுமுன்தினம்திறக்கப்பட்டுள்ளது. தெல்லிப்பழை கூட்டுறவு மருத்துவமனையில் முதியோர்களுக்கான அதி உன்னத சேவையை வழங்கும் நோக்கத்தில் அந்த முதியோர் இல்லம் திறக்கப்பட்டுள்ளது.

தமிழரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜாவின் சிறப்பு நிதி ஒதுக்கீட்டில் 1.5 மில்லியன் ரூபா செலவில் முதியோருக்கான கட்டடம் சீரமைக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வு வைத்தியசாலை தலைவர் மு.கிரிதரன் தலைமையில் வலி வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சோ.சுகிர்தன், மகப்பேறு மருத்துவ நிபுணர் மருத்துவ கலாநிதி ச.சரவணபவன், வடக்கு பிரதேச சபை உறுப்பினர் கலைஅமுதன் மற்றும் கூட்டுறவாளர்களின் பங்கு பற்றுதலுடன் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவால் திறந்து வைக்கப்பட்டது.



20 பேர் தங்கக்கூடிய சகல வசதிகளையும் கொண்டு இந்தச் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது மேற்படி சேவையைப் பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள் நேரடியாகவும், 0767711417தொலைபேசி ஊடாகவும் தொடர்பு கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-21)






**தேர்த் திருவிழா:** யாழ்ப்பாணம் - நல்லூர் சிவன் கோவில் (அம்மன்) தேர்த்திருவிழா கடந்த சனிக்கிழமை காலை வெகுவிமரிசையாக இடம்பெற்றது. (ம)

# தமிழருக்கு அரசியல் தீர்வு கிடையாது என்றாகிவிட்டது

## சிவாஜிலிங்கம் இப்படித் தெரிவிப்பு

கொழும்பு, மே 21

தமிழ் பேசும் மக்களுக்கு அரசியல் தீர்வு வேண்டும். ஆனால் இந்த நாட்டில் அரசியல் தீர்வு இனி கிடைக்காது என்றாகி விட்டது. எனவே தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றித் தருவதற்காக வடக்கு, கிழக்கில் பொதுசன வாக்கெடுப்பை ஐக்கிய நாடுகள் சபை நடத்தித்தர வேண்டும்.



இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ரெலோ தவிசாளருமான எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

தமிழ் இனப் படுகொலை வாரத்தின் 19ஆவது நிகழ்ச்சி காரைதீவு கடற்கரையில் கடந்த வெள்ளிக்கிழமை மதியம் இடம்பெற்றது. இந்த நினைவேந்தல் புலனாய்வு பிரிவினர் நேரில் வந்து நிகழ்வு முழுவதையும் ஒளிப்படங்களாகவும், காணொலிகளாகவும் பதிவுகளை மேற்கொண்டனர் என்று அவரது ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

சுதந்திரம் கிடைத்தது என்று சொல்லப்படுகின்ற 70 ஆண்டுகளாக இலங்கையின் அரச ஆயுதப் படைகளால் தமிழ் மக்கள் இனப் படுகொலை செய்யப்பட்டனர். கிழக்கில் அந்த இனப் படுகொலையின் உச்சக் கட்டம் வாகரையில் கோரமாக முடிந்தது. வடக்கில் முள்ளிவாய்க்காலில் முடிந்தது.

முள்ளிவாய்க்காலில் பல பத்தாயிரக்கணக்கான தமிழர்கள் கொன்றொழிக்கப்பட்டு எமது தேசிய விடுதலைப் போராட்டம் மிக கொடூரமாக நசுக்கப்பட்டு அழிக்கப்பட்டது.

இறுதிப் போர்க் குற்றங்களையும், தமிழ் இனப் படுகொலைகளையும் விசாரிக்க ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலரால் 2010ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழு குறைந்தது 40 ஆயிரம் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்று அறிவித்தது. இதன் தொடர்ச்சியாக 2011ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட நிபுணர் குழு குறைந்தது 70 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டும், காணாமல் ஆக்கப்பட்டும் உள்ளனர் என்று அறிவித்தது. கணக்கிட்டு சொல்ல முடியாத அளவுக்கு மனித பேரவலம் நடந்துள்ளது என்றும் குறிப்பிட்டது.

இந்தநிலையில்தான் நடைபெற்று முடிந்த போர்க் குற்றங்களுக்கும், தமிழினப் படுகொலைகளுக்கும் நீதி கோரி நிற்கிறோம். போர் குற்றங்களுக்கும் இன படுகொலைகளுக்கும் நீதி வேண்டும். 20ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காணாமல் செய்யப்பட்டுள்ளனர். அரச ஆயுத படையினரிடம் குடும்பம், குடும்பமாக சரண் அடைந்தவர்கள், கையளிக்கப்பட்டவர்கள் எங்கே? என்கிற கேள்விக்கு எமக்கு விடை நிச்சயம் கிடைக்க பெற வேண்டும். சகல அரசியல் கைதிகளும் விடுவிக்கப்பட்ட வேண்டும் என்றும் இலங்கை அரச படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டு இருக்கும் தமிழ் மக்களின் கிராமங்களும், தனிப்பட்ட காணிகளும் விடு விக்கப் பட வேண்டும் என்றும் பயங்கரவாத தடைச் சட்டம் மீள பெறப் பட வேண்டும் என்றும் இத்தருணத்தில் கோரி நிற்கின்றோம் -என்றுள்ளது. (ம-த)



# 65 பயனாளிகளுக்கு இந்தியன் மாங்கன்று

## வட்டுக்கோட்டை தமிழரசு வாலிபர் முன்னணி வழங்கியது

யாழ்ப்பாணத், மே 21

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வட்டுக்கோட்டைத் தொகுதி வாலிபர் முன்னணியினரால் 65 குடும்பங்களுக்கு இந்தியன் இன மாங்கன்றுகள் வழங்கப்பட்டன.

மூளாய் இந்து இளைஞர் மன்ற மாதிரி முன்பள்ளியில் கடந்த வெள்ளிக்கிழமை இந்த நிகழ்வு இடம்பெற்றது. வட்டுக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த 65 குடும்பங்களுக்கே இந்த மாங்கன்றுகள் வழங்கப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனுடைய முழு அனுசரணையுடன் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கட்சியின் வாலிப முன்னணிச் செயலர் கி.சுதாகரன் தலைமை வகித்தார்.

இதில் வலிகாமம் மேற்குப் பிரதேசசபையின் தவிசாளர் நடனேந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இதே போன்று சங்கானை, சுழிபுரம். அராலி போன்ற இடங்களிலும் மாங்கன்றுகள் வழங்கப்பட்டன. (ம-21)

### வட்டு. வாலிபர் சங்கத்தால்

# வட்டு. மருத்துவமனைக்கு மருந்துப்பொருள்கள்

யாழ்ப்பாணம், மே 21

வட்டுக்கோட்டை பிரதேச மருத்துவமனைக்கு ஒரு தொகுதி மருந்துப்பொருள்கள் வட்டு இந்து வாலிபர் சங்கத்தால் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

வட்டுக்கோட்டை பிரதேச மருத்துவமனையில் அஸ்மா நோயளார்களுக்கான மருந்து இல்லாது பல நோயளார்கள் கடந்த இரண்டு மாதங்களாக அவதியுறுகின்றனர் என்றும் அந்த மருந்து பொருள்களைத் தந்துதவுமாறும் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்திடம் கடிதம் மூலம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க 132 நோயாளர்களுக்கான 39 ஆயிரத்து 600 ரூபா பெறுமதியான மருந்துகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. (ம)



# பச்சிலைப்பள்ளியில் உள்ள பர்வவதனிக்குப் பொங்கல்


மருதங்கேணி, மே 21

பச்சிலைப்பள்ளி திரியாய் பர்வ வதனி அம்பாள் ஆலய வருடாந்த பொங்கல் சிறப்பாக நிறைவுற்றது.

கடந்த சனிக்கிழமை காலை ஆரம்பமான அம்பாளின் வருடாந்தப் பொங்கல் ஏராளமான அடியார்களின் தரிசனத்துடன் நிறைவுற்றது.

வடமராட்சி, வடமராட்சி கிழக்கு, பச்சிலைப்பள்ளி உட்பட்ட பல பிரதேசங்களில் இருந்து வந்த நூற்றுக்கணக்கான அடியார்கள் அம்பாளுக்குப் பால் காவடி, பறவைக் காவடி எடுத்தும் தீச்சட்டி எரித்தும் பால் செம்பு எடுத்தும் தமது நேர்த்திக் கடன்களை நிறைவு செய்தனர்.

பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபை அடியார்களுக்கு சகல அடிப்படை வசதிகளையும் வழங்கியிருந்த அதேவேளை இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் தமது நடமாடும் மருத்துவ சேவைகளையும் வழங்கியிருந்தது. (து-160)



காரைநகர் களபூமி பாலாவோடை அம்மன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் தேர்த் திருவிழா கடந்த சனிக்கிழமை சிறப்பாக இடம்பெற்றது. (ம-21)

# கலாசார மண்டபப் பராமரிப்புக்கு மூன்று வருடங்கள் அரசே பொறுப்பு

## மாநகர முதல்வர் ஆனல்ட் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், மே 21

யாழ்ப்பாணத்தில் இந்தியத் தூதரகம் அமைத்துவரும் கலாசார மண்டபம் மாநகர சபையிடம் கையளிக்கப்படும்போது பராமரிப்புச் செலவை 3 ஆண்டுகளுக்கு அரசே பொறுப்பேற்று அதற்கான ஆளணிகளையும் பெற்றுத்தர வேண்டும் என்று மாநகர முதல்வர் இ.ஆனல்ட் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தில் தூதுவர் மற்றும் துணைத் தூதுவர் மற்றும் யாழ்ப்பாண அலுவலக கொன்சியூலர் ஆகியோருடன் மீள்குடியேற்ற அமைச்சின் அதிகாரிகள் மாநகரமுதல்வர் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்ட சந்திப்பு அண்மையில் நடைபெற்றது. அதில் மேற்படி கோரிக்கையை மாநகர. முதல்வர் விடுத்தார்.

முதல்வர் மேலும் தெரிவித்ததாவது:

குறித்த கலாசார மண்டபம் மாநகர சபையிடம் கையளிக்கப்படுமாயின் மாதம் ஒன்றுக்கு 10 மில்லியன் ரூபா பராமரிப்புச் செலவு ஏற்படும். இந்தளவு பெரிய தொகையை உடனடியாக சபையால் ஈடு செய்யும் நிலைமையில் சபையின் நிதி நிலமை இல்லை. அதேநேரம் அதனை தேடக்கூடிய சூழலும் கிடையாது. ஏனெனில் போருக்குப் பின்னர் அழிவடைந்த எமது மாநகர சபையின் நிரந்தர அலுவலகமே இன்றுவரை அமைக்கப்படவில்லை.

13 மாடிக் கட்டடத்தில் உள்ள ஒவ்வொரு தொகுதிக்கும் துறைசார் பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டும். இந்த மண்டபத்தை பராமரிப்பதற்கு சுமார் 100 பணியாளர்கள் வேண்டும். அதில் தற்போதைய சட்டத்தின் பிரகாரம் சாதாரண சுத்திகரிப்புத் தொழிலாளிகளை மட்டுமே நியமிக்க முடியும். அவ்வாறானால் ஏனைய அலுவலகர்கள் நியமனத்துக்கு உரிய ஆளணி அங்கீகாரத்தையும் நியமனத்தையும் அமைச்சு உரிய காலத்தில் வழங்க வேண்டும்.

இவற்றுக்கானநியமனத்தின் போது சாதாரண பட்டதாரிகளை வழங்கினால் எம்மால் தொடர்ந்து நடத்த முடியாது. அதனால் துறைசார் அனுபவமுடையவர்களே நியமிக்கப்பட வேண்டும். இவற்றை ஏற்படுத்துவதற்காக சகல தரப்பினையும் உள்ளடக்கிய வகையில் விரைவில் ஒரு கலந்துரையாடலை யாழ்ப்பாணத்தில் நடத்த வேண்டும். இதேநேரம் குறித்த விடயத்தை அரசின் கவனத்துக்குக் கொண்டு செல்வதற்காக கூட்டமைப்பின் தலைவர், தமிழ் அரசுக்கட்சியின் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் மூலம் தற்போது ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன.

இவற்றைக் கருத்திற்கொண்டு கலாசார மண்டபம் எதிர்வரும் 9ஆம் மாதம் கையளிப்பதற்கு இடையில் நியமனங்கள் வழங்கப்படுவதன் மூலமே தொடர்ந்தும் பராமரிக்க முடியும். அல்லது இலங்கை நாணயத்தில் 235 கோடி ரூபாவில் அமைக்கப்பட்ட கட்டடம் பாழடைந்து செல்லும் நிலமை ஏற்படலாம் - என்றார். (த-105)

# போலி அனுமதிப் பத்திரம்; இரு சாரதிகளுக்கு மறியல்

மன்னார், மே 21

போலி மணல் அனுமதிப்பத்திரம் தயாரித்து மணல் அகழ்வில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் சாரதிகள் இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்களின் டிப்பர் வாகனங்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னார் வெள்ளாங்குளம் சோதனைச்சாவடியில் கடந்த வாரம் குறித்த வாகனங்களை வழிமறித்த பொலிஸார் போலி அனுமதிப்பத்திரத்தில் மணல் கொண்டுசென்றனர் என்று சாரதிகள் மீது குற்றஞ்சாட்டினர்.

அவர்கள் மன்னார் நீதிவானிடம் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று இலுப்பக்கடவை பொலிஸார் தெரிவித்தனர். (த-213)

# முதன்மை வீதிகளுக்கு விளக்குகள்

கரவெட்டி பிரதேசசபை எல்லைக்குட்பட்ட முதன்மை வீதிகளுக்கு போதிய மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

பருத்தித்துறை யாழ்ப்பாணம் முதன்மை வீதியில் அல்வாய் மாலிசந்தி தொடக்கம் வல்வைச்சந்தி வரைக்கும், மாலிசந்தி தொடக்கம் உடுப்பிட்டி ஊடாக வல்லை சந்திவரைக்கும், வதிரி தொடக்கம் நெல்லியடி ஊடாக துன்னாலை வரைக்கும் உள்ள வீதிகளுக்கு மின்விளக்குகள் பொருத்தப்பட்டு ஒளிர்கின்றன. (ஜ-173)



# உறவுகளுக்கு தென்னங்கன்றுகள்

மருதங்கேணி, மே 21

இறுதிப் போரில் கொல்லப்பட்ட பொதுமக்களின் உறவுகள் 200 பேருக்கு தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன.

இறுதிப் போரில் கொல்லப்பட்ட மக்களை நினைவு கூரும் முகமாக வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு, வடமராட்சி கிழக்கு கேவில், நிச்சியவெட்டை, கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி, உடுத்துறை, ஆழியவளை ஆகிய பகுதிகளில் உள்ள மக்களுக்கு இவற்றை வழங்கியது. கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்கள் ஊடாக இவை கடந்த சனிக்கிழமை வழங்கப்பட்டன.

வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழு செயற்பாட்டாளர் குறிஞ்சி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், சம்பிரதாய பூர்வமாக தென்னங்கன்றுகளை வடமராட்சி கிழக்கு குடிமக்கள் குழுச் செயலரும் சுண்டிக்குளம் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவருமான செ.உதயசிவம் மற்றும் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுச் செயற்பரட்டாளருமான குறிஞ்சி ஆகியோர் வழங்கி வைத்தனர். (த-160)

# புலிகளின் நீண்டகால உறுப்பினர் சிங்கன் ஞாயிறன்று உயிரிழந்தார்

வடமராட்சி, மே 21

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நீண்டகால உறுப்பினரான சிங்கன் (சிங்கண்ணை) அல்லது கோமகன் என்று அழைக்கப்படும் முருகன்



சிங்கராசா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை உயிரிழந்தார். அன்றைய தினம் மாலை அவரது இறுதி வணக்க நிகழ்வுகள் வடமராட்சி கரவெட்டியில் இடம்பெற்றன.

வடமராட்சி கரவெட்டி கிழக்கில் பிறந்த சிங்கன் இந்திய இராணுவம் தமிழீழ மண்ணில் ஆக்கிரமித்த நேரத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் தன்னை இணைத்துக் கொண்டு பின்னர் முழுநேரப் போராளியானார். இந்தக் காலத்தில் இந்திய இராணுவத்துக்கு எதிரான போராட்டத்தில் இரகசிய வேலைகளையும் சில இடங்களில் வெளிப்படையாகவும் பணியாற்றினார் என்று கூறப்படுகிறது. தமிழ்ச் சமூகம் சார்ந்த சாதியம், பெண் அடிமைத்தனம் மற்றும் சண்டியர்களை அடக்கும் பணிகளில் மேஜர் செங்கதிருடன் இணைந்தும் சிங்கன் பணியாற்றினார் என்றும் கூறப்படுகிறது.

மாவீரர் துயிலுமில்லங்களைக் கட்டியெழுப்புதல், அழிவடைந்த துயிலுமில்லங்களைக் கட்டியெழுப்புதல் போன்ற பணிகளில் ஈடுபட்ட சிங்கன் முள்ளிவாய்க்கால் போரின் இறுதி வரையும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தனது பணியைத் தொடர்ந்து செய்திருந்தார். முள்ளி வாய்க்கால் இறுதிப் போரில் தனது மகள் ஒருவரையும் இழந்து உடல் முழுவதும் காயங்களுடன், வாழ்ந்த சிங்கன் போரின் பின்னர் இராணுவத்தினரால் சிறைப்பிடிக்கப்பட்டு சிறப்புத் தடுப்பு முகாமில் சிறை வைக்கப்பட்டு பின்னர் விடுதலையானார்.

விடுதலையான நாள் முதல் சாதாரண இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப முடியாமல் மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் வாழ்ந்த சிங்கண்ணை தமிழீழ போராட்டம் குறித்தே இறுதி வரையும் புலம்பிக்கொண்டிருந்தார். இவ்வாறான நிலையிலேயே நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை உயிரிழந்தார். அன்று மாலையே இறுதி வணக்க நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ம-21)



# முன்னாள் 40 போராளிகளுக்கு வாழ்வாதார உதவிகள்

யாழ்ப்பாணம், மே 21

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முன்னிட்டு மறுவாழ்வு பெற்ற முன்னாள் போராளிகள் 40 பேருக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கிவைக்கப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனால் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வு நல்லூரில் அமைந்துள்ள தலைமை காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. ஒரு பயனாளிக்கு ஒரு லட்சம் ரூபா வீதம் 40 பேருக்கு தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான உபகரணங்கள் மற்றும் பொருள்கள் கொள்வனவுக்காக குறித்த நிதி வழங்கப்பட்டுள்ளது என்று அவரது ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ம-ஜ-159-173)



*போரில் உயிரிழந்த, அங்கவீனமடைந்த சிப்பாய்களுக்காக 'இராணுவத்தினரின் அர்ப்பணிப்பை நினைவுகூரும் பத்தாண்டு பூர்த்தி' என்னும் தொனிப் பொருளிலான நிகழ்வு, ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தலைமையில் பலாலியில் அமைந்துள்ள இராணுவ நினைவுத் தூபி வளாகத்தில் நேற்று இடம்பெற்றது. இதில் முப்படையினர் அரச அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.* (ம- 7)

# மரக்கறிகளின் விலை குடாநாட்டில் அதிகரிப்பு!

## சில நாள்களில் வீழ்ச்சியுறவும் வாய்ப்பு

யாழ்ப்பாணம், மே 21

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மரக்கறி வகையின் விலைகள் திடீரென அதிகரித்துள்ளன. கடந்த மூன்று நாள்கள் விடுமுறை என்பதால் தம்புள்ளயில் இருந்து மரக்கறி வகைகள் குடாநாட்டுக்கு வந்து சேராததால்தான் அவற்றின் விலைகள் சடுதியாக அதிகரித்ததற்குக் காரணம் என்று சந்தை வியாபாரிகள் தெரிவித்தனர்.

திருநெல்வேலி, சுன்னாகம், மருதனார்மடம், சங்கானை, சாவகச்சேரி, கொடிகாமம் போன்ற சந்தைகளில் மரக்கறி வகைகளின் விலைகள் நேற்று அதிகரித்துக் காணப்பட்டன. சகல மரக்கறி வகைகளும் கிலோ 100 ரூபாவுக்கு மேல் விற்கப்பட்டன. அதே சமயம் முருங்கைக்காயின் விலை குறைந்து காணப்பட்டது. கடந்த வாரத்தில் கிலோ 180 ரூபாவாக விற்கப்பட்ட முருங்கைக்காய் தற்போது கிலோ 100 ரூபாவாக குறைவடைந்துள்ளது.

அதேநேரம் இனிவரும் நாள்களில் குறிப்பாக அடுத்தடுத்த வாரங்களில் மரக்கறிகளின் விலையில் வீழ்ச்சி ஏற்படவும் வாய்ப்பு உள்ளது என்று சொல்லப்படுகிறது.




நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலை காரணாமாகப் பாதுகாப்புப் பிரிவினர் பல இடங்களில் வாகனங்களை மறித்து முழுமையான சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். வாகனங்களில் பயணிப்பவர்களை கீழே இறக்கி அவர்கள் உடமைகள் முழுமையாக இறக்கி சோதனையின் பின்னரே அனுப்பி வைக்கப்படுகின்றன.


யாழ்ப்பாணத்தில் இருந்து தம்புள்ள சந்தைக்கு மரக்கறிகளைக் கொண்டு செல்வதற்கு சுமார் 7 சோதனை செய்யும் இடங்களைத் தாண்டிச் செல்ல வேண்டி இருக்கிறது.

இதன்காரணமாக குடாநாட்டு மரக்கறிகள் ஏற்றுமதி இல்லாமல் முடங்கும் நிலை உள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (ம-7,17)

## தேனீக்களின் திருவிழா







உலக தேனீக்கள் தினத்தை முன்னிட்டு காரைநகரில் தேனீக்களின் திருவிழா நேற்று சிறப்பாக நடைபெற்றது. யாழ்ப்பாணம் தேனீ வளர்ப்பு ஒன்றியத்தின் ஏற்பாட்டில் காலை 9 மணிக்கு காரைநகர் கோவளம் பகுதியில் விழா இடம் பெற்றது. தேன் அறுவடை, தேனீ வளர்ப்பு தொடர்பான கலந்துரையாடல் போன்ற பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றன. தேனீ வளர்ப்பாளர்கள் மற்றும் இயற்கை விரும்பிகள் சிறு தொழில் முயற்சியாளர்கள் எனப் பலர் இதில் கலந்து கொண்டனர். (ம–7)

## விபத்தில் இருவர் காயம்

பருத்தித்துறை, மே 21

வேகக் கட்டுப்பாட்டை இழந்த வடி வாகனம் ஒன்று தென்னைமரத்துடன் மோதியதில் அதில் பயணித்த நால்வரில் இருவர் படுகாயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர்கள் மருதங்கேணி பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். இந்த விபத்து பருத்தித்துறை செம்பியன்பற்றுப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணியளவில் இடம்பெற்றது.

இதில் பருத்தித்துறை தம்பசிட்டி பன்டான அம்மன் கோவிலடியைச் சேர்ந்த மயூரன் (வயது 13), ஐங்கரன் (வயது18) ஆகியோரே படுகாயமடைந்தனர்.

மருதங்கேணியில் இருந்து பருத்தித்துறை நோக்கி பயணித்த வடி வாகனமே இவ்வாறு விபத்துக்குள்ளானது. (ஐ-173,160)

சுகாதாரச் சீர்கேடு

## உணவக உரிமையாளர்களுக்கு 33ஆயிரம் ரூபா தண்டம் விதிப்பு

வலி.தென்மேற்கு, மே 21

யாழ்ப்பாண நகரில் சுகாதார சீர்கேடுகளுடன் இயங்கிய இரு உணவகங்களின் உரிமையாளர்களுக்கு 33 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. மறு அறிவித்தல் வரை இரு உணவகங்களையும் மூடுமாறும் உத்தரவிடப்பட்டது.

யாழ்ப்பாண மாநகர பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பா.சஞ்ஜீவன், யாழ்ப்பாண நகரிலுள்ள உணவகங்கள் மீது கடந்த வியாழக்கிழமை சோதனை நடத்தினார். இதன்போது பள்ளிவாசல் வீதியில் இயங்கிவந்த உணவகம் மற்றும் யாழ்ப்பாணம் கச்சேரி பழைய பூங்கா வீதியில் இங்கி வந்த உணவகம் ஆகியவை பல குறைபாடுகளுடன் இயங்கி வந்தமை தெரியவந்தது. இதையடுத்து இரு உணவகங்களின் உரிமையாளர்களுக்கும் எதிராக கடந்த 17ஆம் திகதி யாழ்ப்பாண நீதிமன்றத்தில் சுகாதாரப் பரிசோதகரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இதன்போது பள்ளிவாசல் வீதியில் இயங்கி வந்த உணவக உரிமையாளர் குற்றத்தை ஏற்றுக் கொண்டதையடுத்து அவருக்கு 7 குற்றச்சாட்டுகளுக்கு 21 ஆயிரம் ரூபா தண்டம் விதித்த நீதிவான் மறு அறிவித்தல் வரை உணவகத்தை மூடுமாறும் உத்தரவிட்டார்.

பழைய பூங்கா வீதியில் இயங்கி வந்த உணவக உரிமையாளர் குற்றத்தை ஏற்றுக் கொண்டதையடுத்து அவருக்கு 6 குற்றச்சாட்டுகளுக்கு 12 ஆயிரம் ரூபா தண்டம் விதித்த நீதிவான் மறுவித்தல் வரை உணவகத்தை மூடுமாறும் உத்தரவிட்டார். (ஐ-115)



## போரால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உதவி

யாழ்ப்பாணம், மே 21

போரால் பாதிக்கப்பட்டு வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பாடசாலை மாணவர்களுக்கு கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தால் நிதியுதவி வழங்கப்பட்டது.

கிளிநொச்சியைச் சேர்ந்த 3 மாணவர்களுக்கு ஆலய பெருந்திருவிழாவின் போது வருடாவருடம் இந்த நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் குறித்த ஆலயத்தின் தேர்த்திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இதன்போது ஆலயத்தால் குறித்த 3 மாணவர்களது பெற்றோரிடம் நிதி வழங்கி வைக்கப்பட்டது.

ஆலய பரிபாலன சபையின் உப தலைவர் பொ.சிவப்பிரகாசம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பரிபாலன சபையின் செயலர் என்.காண்டீபன், பொருளாளர் என்.ஆனந்தராசா, சபை உறுப்பினர் பா.நந்தகுமார் ஆகியோர் இந்த மாணவர்களின் கல்விக்கான நிதியுதவியை வழங்கி வைத்தனர். (ஐ-17)



**தேர்த் திருவிழா:** கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழாவின் தேர்த் திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. பஞ்சமுக விநாயகப் பெருமான் தேரில் எழுந்தருளி வீதி வலம் வந்தார். ஆலயத் திருவிழா கடந்த 9ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. (ஐ–17)


## வாகரையில் விபத்து 3 எருமைகள் சாவு!

மட்டக்களப்பு, மே 21

மட்டக்களப்பு மாவட்டம் வாகரை திருகோணமலை முதன்மை வீதியின் கதிரவெளியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு இடம்பெற்ற விபத்தில் மூன்று எருமைகள் உயிரிழந்தன.

வாகரைப் பகுதியிலிருந்து திருகோணமலை நோக்கிச் சென்று கொண்டிருந்த வானகமே குறித்த எருமைகளை மோதித்தள்ளியது என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ம)





## தண்ணீர் சுத்திகரிப்பு நிலையங்கள் திறப்பு

வவுனியா, மே 21
வவுனியாவில் தலா 15 லட்சம் ரூபா செலவில் குடிதண்ணீர் சுத்திகரிப்பு நிலையங்கள் இரண்டு மக்கள் பாவனைக்காக வழங்கப்பட்டன.
இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் வவுனியா கல்மடு மற்றும் சன்னாசி பரந்தன் ஆகிய இடங்களில் இடம்பெற்றது.
அனைவருக்கும் சகவாழ்வழிக்கும் ஆரோக்கியமான சமூகமொன்றை உருவாக்கும் நோக்கில் 'சிறுநீரக நோய்த்தடுப்பு' எனும் அரச தலைவர் செயலணியின் சிறப்புச் செயற்றிட்டத்தின் கீழ் இந்த நிலையங்கள் அமைக்கப்பட்டன. நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் கலந்துகொண்டு மேற்படி நிலையங்க்ளைத் திறந்துவைத்தார். நிலையங்களின் கட்டுமானப் பணிகளை கடற்படையினர் மேற்கொண்டனர்.
நிகழ்வில் வவுனியா நகரசபை உப தவிசாளர் குமாரசுவாமி, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை பிரதித் தவிசாளர் மகேந்திரன், இலங்கை கடற்படையின் குறித்த செயற்றிட்டத்துக்குப் பொறுப்பான லப்டினன், என்.நவரத்தின, நெடுங்கேணி பிரதேச சபை உறுப்பினர் பார்த்தீபன் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ம-ஜ.222)

# வவுனியா வளாகத்தின் கற்றல் நாளைய தினம் ஆரம்பம்

வவுனியா, மே 21
யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் வவுனியா வளாகத்தின் கற்றல் நடவடிக்கைகள் நாளை புதன்கிழமை ஆரம்பமாகவுள்ளது என்று வளாக முதல்வர் கலாநிதி ரி.மங்களேஸ்வரன் தெரிவித்தார்.

இலங்கையில் ஈஸ்டர் தினத்தில் ஏற்பட்ட குண்டுவெடிப்புச் சம்பவங்களை அடுத்து பல்கலைக்கழகத்தின் கற்றல் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.
இந்த நிலையில் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் கற்றல் நடவடிக்கை ஆரம்பமாகும் என்று உயர் கல்வி அமைச்சு அறிவித்தல் வழங்கியிருந்த நிலையில் தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கற்றல் செயற்பாடுகளையும் ஆரம்பிப்பதற்குத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.
இதன் பிரகாரம் வளாகத்தின் விஞ்ஞான பீடம் மற்றும் வர்த்தக பீடங்களின் கற்றல் செயற்பாடுகள் நாளை ஆரம்பிக்கப்படவுள்ளதுடன் விடுதியில் தங்கியுள்ள மாணவர்கள் இன்று முற்பகல் 9 மணியில் இருந்து பிற்பகல் 3 மணிவரை வருகை தரமுடியும் எனவும் வளாக முதல்வர் அறிவித்துள்ளார். (ம-110)



## வீதி சீரமைப்புப் பணி ஆரம்பம்

கிளிநொச்சி, மே 21
கிளிநொச்சி, பச்சிலைப்பள்ளி மாசார் முருகந்தகர் வீதியின் சீரமைப்புப் பணிகள் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டன. இந்த வீதியின் சீரமைப்புப் பணிக்காக நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் 2 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளார்.
குறித்த வீதிக்குரிய அடிக்கல்லைப் பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபைத் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் நட்டு வைத்தார்.
நிகழ்வில் பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபை உபதவிசாளர் கஜன், உறுப்பினர்களான அருட்செல்வி, கோகுல், பொருளாதார அபிவிருத்தி அலுவலகர் சுதர்சினி, கிராம அமைப்பினர் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-ஜ,6)

## மின்தடை அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே 21
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக ஒரு மாத காலத்துக்கு வடக்கின் பல பகுதிகளில் மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
இதன்படி இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை மன்னார் மாவட்டத்தில் தலைமன்னார் கிராமத்திலும்,நாளை புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை கிளிநொச்சி மாவட்டத்தில் நெற்புலவிலும், மன்னார் மாவட்டத்தில் பெரியமுறிப்பு, திக்கம், மாதாகிராமம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ)

## 750 மில்லிகிராம் ஹெரோய்ன் மீட்பு

### ஒருவர் கைது

வவுனியா, மே 21
750 மில்லிக்கிராம் ஹெரோய்ன் போதைப் பொருளுடன் இளைஞன் ஒருவன் கைது செய்யப்பட்டுள்ளார் என்று வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.
வவுனியா பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து நேற்றுமுன்தினம் இளைஞன் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது. இதனடிப்படையில் வவுனியா நகரிலிருந்து மன்னாருக்குச் செல்லும் முதன்மைச் சந்திக்கு அண்மையில் அமைந்துள்ள எரிபொருள் நிலையப் பகுதியில் வைத்து அவர் கைது செய்யப்பட்டார்.
தனிமையில் நின்ற அவரைச் சோதனைக்கு உட்படுத்தப்டுத்தியபோது அவரிடமிருந்து 750 மில்லிக்கிராம் ஹெரோய்ன் போதைப் பொருள் மீட்கப்பட்டது என்று தெரிவித்த பொலிஸார், விசாரணைகளின் பின் அவர் நீதிவான மன்றில் முற்படுத்தப்படுவார் என்றும் தெரிவித்தனர். (ம-21)

## செ்ன்.லோறன்ஸ் வித்தியாலயத்தின் கேட்போர்கூடம் கையளிக்கப்பட்டது

மன்னார், மே 21
தலைமன்னார் ஊறுமலை சென். லோறன்ஸ் றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தின் கேட்போர் கூடம் சீரமைக்கப்பட்டு கடந்த வெள்ளிக்கிழமை மாணவர்களிடம் கையளிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் மத குருமார்கள் கடற்படை அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்துக் கொண்டனர்.




இந்தக் கேட்போர் கூடத்தின் சீரமைப்புக்கு நிதி உதவியை அமெரிக்காவைச் சேர்ந்த திருமதி லக்ஷ்மி கெண்டர் வழங்கியுள்ளார். சீரமைப்புப் பணிகளை வடமத்திய கடற்படை நிறைவேற்று பொறுப்பு கட்டளை தளபதி றியல் எட்மிரல் முதித கமகேவின் வழிகாட்டலில் கடற்படை சிவில் பொறியியலாளர் பிரிவு மேற்கொண்டது. (ஜ-222)



## வவுனியாவில் 67 பேருக்கு உறுதிபூசுதல் வழங்கப்பட்டது

வவுனியா, மே 21
வவுனியா வடக்கு கனகராஜன்குளம் தூய அந்தோனியார் ஆலயத்தில் நேற்று மன்னார் மறைமாவட்ட ஆயரால் 67 பேருக்கு உறுதிபூசுதல் திருவருட்சானம் வழங்கிவைக்கப்பட்டது.
இந்த நிகழ்வில் திருத்தந்தையின் பிரதிநிதி, செயலர், ஆலய பங்குத்தந்தை, மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர், அருட்பணியாளர்கள், அருட்சதோதரிகள், பெற்றோர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (ம)



**வைகாசிப் பொங்கல் :** கிழக்கில் வரலாற்றுச் சிறப்பு மிக்க சேனையூர் ஸ்ரீ நாகம்மாள் ஆலயத்தின் வருடாந்த வைகாசிப் பொங்கல் பெருவிழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றது. (ம)

# சட்டவிரோத மீன்பிடி காரணமாக உள்ளூர் மீனவர்கள் 50 பேர் கைது

## கடந்த 11 மாதங்களின் எண்ணிக்கை இது என கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்தது

யாழ்ப்பாணம், மே 21

சட்ட விரோத மீன் பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் வடக்கு மாகாணத்தில் கடந்த ஜூன் மாதம் தொடக்கம் இதுவரை உள்ளூர் மீனவர்கள் 50க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்தது.

இது பற்றிய மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:
இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன் பிடியில் ஈடுபடுகிறார்கள் என்று தெரிவிக்கும் இந்த நிலையில் உள்ளூர் மீனவர்களும் சட்டவிரோத மீன் பிடியில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த மாதம் தொடக்கம் இதுவரை சுமார் 50க்கும் மேற்பட்ட மீனவர்கள் கைது செய்யப்பட்டு நீரியல்வள திணைகள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளனர். முறையான அனுமதிப் பத்திரம் இன்றி மீன் பிடித்தல், வெடி வைத்து மீன் பிடித்தல், தடை செய்யப்பட்ட மீன் வலைகளைப் பயன்படுத்தி மீன் பிடித்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளுக்காக அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (த-7)



இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நிண்ட கால அங்கத்தவரும், நிர்வாக சபை உறுப்பினரும், கட்சியின் தேசிய சபை உறுப்பினரும் பிரதேச சபை முன்னாள் உறுப்பினருமான காளிமுத்து சிவசாமி நேற்றுமுன்தினம் காலமானார். அவரின் உடலுக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமான் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். (த)

# முள்ளிவாய்க்கால் பேரணி பிரிட்டனிலும் இடம்பெற்றது

யாழ்ப்பாணம், மே 21

பிரித்தானியாவில் முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பின் 10ஆம் ஆண்டு நினைவு நாளில் மாபெரும் எழுச்சிப் பேரணி இடம்பெற்றது.

கிறீன்பார்க் பகுதியில் பிற்பகல் 2 மணிக்கு ஒன்றுகூடிய மக்கள் அங்கிருந்து பேரணியாக பிரிட்டன் நாடாளுமன்ற சதுக்கத்தை சென்றடைந்தனர். அங்கு முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களுக்கான அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. முள்ளி வாய்க்காலில் கொடிய இன அழிப்பின் சாட்சிகளாக வெளிவந்த படங்களையும், தமிழ்த் தேசிய விடுதலைப் புலிகளின் கொடிகளை ஏந்தியவாறும் பேரணியில் ஈடுபட்டனர். (ஐ-159)



## கலாபூஷண விருதுக்கு விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், மே 21

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் 2019 ஆம் ஆண்டுக்கான கலாபூஷண விருதுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. 2019ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 60 வயதுக்கு மேற்பட்டோர் கலாபூஷண விருதுக்கு விண்ணப்பிக்க முடியும். பருத்தித்துறைப் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த கலைஞர்கள் தங்களது விண்ணப்பப் படிவத்தைப் பருத்தித்துறைப் பிரதேச செயலக கலாசார கிளையில் பெற்று எதிர்வரும் ஜூன் 5ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்து பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ஐ)



# ‘உலகப்பட புவியியல்’ நூல்வெளியிடப்பட்டது

கிளிநொச்சி, மே 21

ஆசிரியர் ஜெயராசா தர்சன் எழுதிய `உலகப்படப் புவியியல்' நூல் வெளியிடப்பட்டுள்ளது.

க.பொ.த உயர்தர புதிய பாடத்திட்டத்துக்கு அமைவாக எழுதப்பட்ட இந்த நூல் கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டது.

முதன்மை விருந்தினராக கிளிநொச்சி உருத்திரபுர மகா வித்தியாலய அதிபர் திருமதி மீனலோஜினி இதயசிவதாஸ் கலந்துகொண்டார். அவர் புத்தகத்தின் முதற் பிரதியை வெளியிட்டு வைக்க தொழிலதிபர் பாரதி ஹோட்டல் எஸ். ரவிபெற்றுக்கொண்டார்.

இந்த நிகழ்வில் மாணவர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட பெருமளவானோர் கலந்து கொண்டனர். (த-214)

கொழும்பிலிருந்து வந்திருந்த அதிகாரிகளின் சோதனையில்

# ரூ.10 லட்சம் பெறுமதியான தங்கூசி வலைகள் மீட்பு

வலி.தென்மேற்கு மே 21

கிளிநொச்சி பள்ளிக்குடாக்கடற்கரையில் அநாதரவான நிலையில் இருந்த பத்து லட்சம் ரூபா பெறுமதியான தங்கூசி வலைகளையும் வள்ளத்தையும் மீட்டனர்.

வலைகளை நீதிமன்றில் ஒப்படைத்த அதிகாரிகள் வள்ளத்தை திணைக்களத்தின் பாதுகாப்பில் வைத்துள்ளனர்.

சட்ட விரோதமாகத் தொழிலில் ஈடுபடுபவர்களைக் கைது செய்வதற்காக கொழும்பிலிருந்து வந்திருந்த அதிகாரிகள் சில நாள்களுக்கு முன்னர் அவற்றை மீட்டனர்.

இதையடுத்து வலைகளைக் கைப்பற்றி கிளிநொச்சி நீதிமன்றில் ஒப்படைத்தனர். அதிகாரிகள் வள்ளத்தைத் திணைக்கப் பாதுகாப்பில் வைத்துள்ளனர். எவரும் கைது செய்யப்படவில்லைஎன்று தெரிவிக்கப்பட்டது. (த-115)

# முள்ளிவாய்க்கால் 10ஆம் ஆண்டில் டென்மார்க் நாட்டில் எழுச்சிப்பேரணி

யாழ்ப்பாணம், மே 21

டென்மார்க்கில் முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பின் 10ஆம் ஆண்டு நினைவில் மாபெரும் எழுச்சிப் பேரணி உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.

இந்தப் பேரணியில் டென்மார்க்கின் அனைத்து நகரங்களிலிருந்தும் தமிழீழத்தை சேர்ந்த மக்கள் கலந்து கொண்டு தங்கள் மனதில் உள்ள வலிகளை வெளிப்படுத்தினர்.

டென்மார்க் நாடாளுமன்ற முன்றலில் இருந்து பேரணி ஆரம்பமாகி நகர சபை முன்றலில் நிறைவடைந்தது. அங்கே இனப்படுகொலை செய்யப்பட்ட மக்களுக்கு சிறப்பு நினைவுத் தூபி அமைக்கப்பட்டு, அதனை சுற்றி பல்லாயிரக்கணக்கான மக்கள் சூழ்ந்து நின்று ஈகைச்சுடரேற்றி மலர் வணக்கம் செலுத்தினர். ஈழத்தமிழர்களுக்கு நடந்தது இன அழிப்பு என அங்கீகரிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி டென்மார்க் அயலுறவுத்துறை அமைச்சுக்கும், நாடாளுமன்றத்துக்கும் மனு கையளிக்கப்பட்டது. (ஐ)





# மருத்துவக் கற்றாழைகள் கடத்தப்படுவது அதிகரிப்பு

## மன்னாரில் சனியன்றும் இருவர் கைது





மன்னார், மே 21
மருத்துவக் குணமுடைய கற்றாழைச் செடிகளைக் கடத்திச் செல்லும் சம்பவங்கள் வடக்கில் அதிகரிகரித்துள்ளன. மன்னார், யாழ்ப்பாணம் மாவட்டங்களில் இருந்து இந்தக் கற்றாழைகள் கடத்தப்படுகின்றன என்று தெரிவிக்கப் படுகிறது. மன்னார் வங்காலைப் பகுதியில் இவ்வாறு கற்றாழைகளைக் கடத்திச் சென்ற இருவர் கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வட மத்திய கடற்படை கட்டளையின் கடற்படையினர் மற்றும் வங்காலைப் பொலிஸார் இணைந்து வங்காலை ஈரநில பகுதியில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது குறித்த ஈரநில பகுதிக்கு சொந்தமான கற்றாழைத் தாவரங்களைக் கடத்த முற்பட்டனர் என்ற குற்றச்சாட்டில் இருவரைக் கைது செய்துள்ளனர்.

18 பொதிகளாக கட்டப்பட்ட நிலையில் 510 கிலோ கிராம் கற்றாழைச் செடிகள் அவர்களிடம் இருந்து மீட்கப்பட்டன என்று கடற்படையினர் தெரிவித்தனர். கற்றாழைகளை அங்கிருந்து பாரவூர்தி ஒன்றின் மூலமே கடத்த முற்பட்டார்கள் என்று அவர்கள் மீது குற்றஞ்சாட்டப் படுகிறது. பாரவூர்தியும் தடுத்து வைக்கப்பட்டது. கைது செய்யப்பட்டவர்கள், மன்னார், புதுகுடிருப்பு பகுதியில் வசிக்கின்ற 39 மற்றும் 36 வயதுகளை உடையவர்கள் என்று கடற்படையினர் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட நபர்கள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். கற்றாழை தாவரங்கள் மற்றும் பாரவூர்தி என்பன மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணத்தின், யாழ்ப்பாணம் தீவகம், பொன்னாலைப் பகுதிகளில் இருந்து பெருமளவான கற்றாழைச் செடிகள் கடத்தப்பட்டுவந்தன. சில சம்பவங்கள் முறியடிக்கப்பட்டன. அதே போன்று மன்னாரில் பல இடங்களிலும் இவ்வாறு கற்றாழைக் கடத்தல்கள் இடம்பெறுகின்றன. மருத்துவக் குணமுடைய மூலிகைச் செடியாக கற்றாழை இனங்காணப்பட்டுள்ளது. அத்துடன் தோல்களை அழகுபடுத்தும் கிறீம்களும் இந்தக் கற்றாழைகளின் மூலமே தயாரிக்கப்படுகிறது. கற்றாழைச் செடி ஒன்று 80 ரூபா முதல் 150 ரூபா வரை சந்தப்படுத்தப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டது. (21)



## பாடசாலைக்கு அடிக்கல்

முல்லைத்தீவு, மே 21
முல்லைத்தீவு நெடுங்கேணி மாமடுச்சந்தி வெள்ளைப்பிள்ளையார் ஆலய 'கற்பகா' அறநெறிப் பாடசாலைக் கட்டடத்துக்கு நேற்று அடிக்கல் நடப்பட்டது.

இந்தக் கட்டடம் அமைப்பதற்கு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசா 10 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்துள்ளார். நிகழ்வில் கிராம மக்கள் அறநெறி பாடசாலை மாணவர்கள் பெரியோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ-222)

## ஒருவழிப்பாதையாக மாற்றப்பட்ட வீதிகள்

யாழ்ப்பாணம், மே 21
நாட்டில் ஏற்பட்டுள்ள பாதுகாப்பு அச்சுறுத்தலை அடுத்து பாடசாலைகளுக்கு அண்டியுள்ள சில வீதிகள் குறிப்பிட்ட சில நேரங்களில் ஒருவழிப்பாதை வீதிகளாக மாற்றப்பட்டுள்ளன.

இதன்படி, யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியுடன் தொடர்புடைய சென். பற்றிக்ஸ் வீதி மற்றும் மத்தியூஸ் வீதி ஆகியனவும், யாழ்ப்பாணம் சென். ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்துக்கு அருகில் செல்லும் றக்கா வீதி மற்றும் மருதடி வீதி ஆகியனவும் பாடசாலை நாள்களில் காலை 7 மணிமுதல் 8 மணி வரையும், பிற்கல் ஒரு மணி முதல் இரண்டு மணி வரையும் ஒழு வழிப்பாதையாக மட்டுமே இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)



## தாராபுரத்தில் மீண்டும் சோதனை

மன்னார், மே 21
மன்னார் தாராபுரத்தில் மீண்டும் முஸ்லிம் மக்கள் வீடுகளில் பாதுகாப்புத் தரப்பினர் நேற்றுச் சோதனை நடத்தினர். காலை 6 மணியிலிருந்து மதியம் 12 மணிவரை சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்றன.

இதன்போது சந்தேகத்துக்கு இடமான பொருள்கள் எவையும் மீட்கப்படவில்லை. அத்துடன் எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்தனர். கடந்த ஐந்தாம் திகதியும் பாதுகாப்புத் தரப்பினரால் மன்னார் தாராபுரத்தில் உள்ள அமைச்சர் ரிஷாத்தின் வீடு சோதனை செய்யப்பட்டது. (ஐ-213)

## ஔடதத் துறையில் கைதேர்ந்த நாகமணி உயிரிழந்தார்!



முல்லைத்தீவு, மே 21
வன்னி பெருநிலப்பரப்பில் மூத்த ஆளுமைகளில் ஒருவரான சித்த வைத்தியர் அரியகுட்டி நாகமணி நேற்றுமுன்தினம் தனது 83 ஆவது வயதில் இயற் கை எய்தினார்.

தந்தை அரியகுட்டியின் வழியில் சித்த வைத்திய துறையில் தனது 30ஆவது வயதில் கால் பதித்த நாகமணி இயற்கை எய்தும் வரை தொடர்ந்து நோய் தீர்க்கும் மணிமந்திர ஔடத துறையில் கைதேந்தவராக விளங்கினார்.

முல்லைத்தீவு, கற்சிலை மடுவில் பிறந்த நாகமணி விஷக்கடி, மகப்பேற்று வைத்தியம், சிறு பிள்ளைகளுக்கான மருத்துவம், சர்ப்ப ரோக மருத்துவம் ஆகியவற்றுக்குப் பெயர்பெற்றவர்.

இதனால் அவர் பல விருதுகளுக்குச் சொந்தக்காரர் ஆனார். மருத்துவ துறை மாத்திரமின்றி தமிழர் பாரம்பரியங்களை இன்றைய தலைமுறைக்கு கொடுக்கும் ஒரு பொக்கிஷமாகவும் திகழ்ந்தார் நாகமணி. தந்தையைப் போன்று தானும் சித்த மருத்துவத் துறையில் கால் பதித்து, மகன், பேரன் என தனது பரம்பரையையும் அதனுள் ஈடுபடுத்தி சேவை செய்தார். உடல் மக்கள் அஞ்சலிக்காக கற்சிலை மடுவிலுள்ள அன்னாரின் இல்லத்தில் வைக்கப்பட்டு நேற்று இறுதிக்கிரியைகளும் நடைபெற்றன. (ம-21)



இத்தாலியில் வாழ்கின்ற கதிர் கிறிஸ்ரியனோ என்ற குழந்தையின் ஞானஸ்தான நிகழ்வை முன்னிட்டு அந்தக் குழந்தையின் குடும்பத்தினரின் நிதி உதவியுடன் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் கல்வி மேம்பாட்டுத் துறையால் வவுனியா சிதம்பரபுரத்தில் உள்ள 50 சிறார்களுக்கு புத்தகப்பை மற்றும் கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. (ம)

## அறிக்கையையும் பெயர்ப்பலகையையும் தூக்கி எறிந்தார் முன்னணி உறுப்பினர்

சாவகச்சேரி, மே 21
சாவகச்சேரி நகர சபையின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர், தனக்கு வழங்கப்பட்ட அறிக்கையையும் தனது பெயர்ப் பலகையையும் தூக்கி எறிந்துள்ளார். இந்தச் சம்பவம் சாவகச்சேரி நகரசபையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

நகர சபையின் மாதாந்த அமர்வு சபா மண்டபத்தில் நடைபெற்ற போது 18 உறுப்பினர்களும் வருகை தந்திருந்தனர். கடந்த மாத அமர்வுகளின் அறிக்கைகள் மற்றும் கடந்த மாத நிதி அறிக்கை ஆகியன உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டன. அதன்போதே அறிக்கையைப் பார்த்த உறுப்பினர் ம.நடனதேவன் அறிக்கையையும் தனது பெயர்ப் பலகையையும் தூக்கி எறிந்தார்.

தான் தெரிவித்த கருத்துக்கள் அறிக்கையில் வரவில்லையெனக்கூறி அவ்வாறு செய்தார் என்று கூறப்பட்டது. சக உறுப்பினர்கள் அவற்றை ஒன்று சேர்த்து அருகிலுள்ள மேசையில் வைத்தனர். அவை அமர்வு முடியும் வரை மேசையிலேயே காணப்பட்டன.

ஏனைய சபைகளின் அமர்வுகளில் தெரிவிக்கப்படும் கருத்துக்கள் அனைத்தையும் கொண்ட 30 அல்லது 40 பக்க அறிக்கை உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்றன. ஆனால் எமது சபையில் நாள் முழுவதும் அமர்வு இடம்பெற்றாலும் மூன்று அல்லது நான்கு பக்கங்களிலேயே வழங்கப்படுகின்றன என்று அவர் தவிசாளரிடம் தெரிவித்தார்.

'சபை அமர்வில் தெரிவிக்கப்படும் முக்கிய விடயங்கள் தவிர்ந்த தேவையற்ற விடயங்களை அறிக்கையில் குறிப்பிடல் வேண்டாமென்றும் அமர்வில் தெரிவிக்கப்படும் கருத்துக்கள் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படுவதால் சபையில் தெரிவிக்கப்படும் முழுமையான கருத்துக்கள் பற்றி பொதுமக்களிடையே தப்பான கருத்துக்களை உருவாக்கிவிடுமென்றும் உள்ளூராட்சித் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர். பொதுமக்களுக்குச் சென்றடையக்கூடிய நல்ல கருத்துக்களைக் கொண்ட அறிக்கையே சபையில் வழங்கப் படுகின்றன' என்று தவிசாளர் கூறினார்.

அவ்வாறாயின் நாங்கள் அமர்வுக்கு வந்து கருத்துக்களைத் தெரிவிப்பது அறிக்கையில் வராவிடின் உறுப்பினராகச் செயற்படுவது தேவையற்றது எனக்கூறி வழங்கப்பட்ட அறிக்கையையும் பெயர்ப் பலகையையும் தூக்கி வீசிவிட்டு வெளியேற முயற்சித்தார். அருகில் இருந்த உறுப்பினர்கள் அவரைச் சாந்தப்படுத்தி அமர்வில் தொடர்ந்து கலந்து கொள்ளச் செய்தனர். (கு-9)

# போர் வெற்றிக்கு அதிக பங்களிப்பு முஸ்லிம்களிடமிருந்து கிடைத்தது

## தமக்குள் வேறுபாடுகள் இல்லை என்று கண்டி இராணுவப் பொறுப்பதிகாரி தெரிவிப்பு

கொழும்பு, மே 21

**போ**ர் வெற்றிக்காக அதிகளவிலான பங்களிப்பு முஸ்லிம் தரப்பில் இருந்து கிடைத்துள்ளது. நாட்டுக்காக முஸ்லிம் சகோதரர்கள் உயிர்த் தியாகம் செய்துள்ளார்கள். தமிழ் மக்களும் அவ்வாறு செய்துள்ளனர். எந்த வேறுபாடுகளின்றி எல்லோரும் மனிதர் என்றே நாங்கள் நேசிக்கின்றோம்.

இவ்வாறு கண்டி பள்ளேகல இராணுவ முகாமின் பொறுப்பதிகாரி பிரிகேடியர் சாந்த ஹேரத் தெரிவித்தார்

கண்டி கட்டுக்கலை ஜும்ஆ பள்ளிவாசலின் ஏற்பாட்டில் தேசிய இராணுவ வீரர்களின் ஞாபகார்த்த தினத்தை முன்னிட்டு சிறப்பு துஆப் பிரார்த்தனை அதன் தலைவர் அப்சல் மரைக்கார் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

அதில் முதன்மை அதிதியாகக் கலந்து கொண்ட சாந்த ஹேரத் மேலும் தெரிவித்ததாவது:

போர்க் காலத்தில் அதிகளவிலான முஸ்லிம்களுடைய ஆதரவு எங்களுக்குக் கிடைத்தது. இராணுவத்தில் கூடுதலான முஸ்லிம் சகோதரர்கள் இருந்தார்கள். இன்னும் இருக்கின்றார்கள். என்னுடைய தகுதியை ஒத்த சகோதரர் ஜமால்தீன் என்றொருவர் இருந்தார். அவர் புலிகளின் தாக்குதல் காரணமாக உயிரிழந்து விட்டார். அவர் என்னுடைய மிக நெருங்கிய நண்பர். முஸ்லிம் சகோதரர்கள் எங்களுடன் இணைந்து செயலாற்றினார்கள். எங்களுக்கிடையே எந்தவிதமான வேறுபாடும் இருக்கவில்லை. அதேபோன்று தமிழ் மக்களுடனும் எந்தவிதமான வேறுபாடும் இருக்கவில்லை. எங்களுடைய கடமையைச் செய்யும்போது எல்லோரையும் ஒரு சாதாரண அப்பாவி மனிதர்களாகவே நாங்கள் பார்ப்போம். படைவீரர்கள் உட்பட எல்லோரும் தாய் நாட்டைச் சேர்ந்தவர்கள்.



நாங்கள் எல்லோருடனும் நேசம் வைத்துள்ளோம். நாங்கள் இராணுவச் சீருடை அணிந்தாலும் சிங்களவர்கள் என்று பார்ப்பதில்லை. நாங்கள் எல்லோரும் மனிதர்கள். மாவிலாறு போரின்போது இரண்டு இலட்சம் தமிழ் மக்கள் இருந்தார்கள். அதில் ஒரு இலட்சம் மக்கள் எங்கள் பக்கம் வந்தார்கள். அந்த மக்களை இல்லாமற் செய்தது நாங்கள் அல்ல. 7 கிலோமீற்றர் அளவில் நெருங்கி விட்டோம். அவர்களுக்கு எங்களால் எந்த ஆபத்தும் ஏற்படவில்லை. அந்த இடத்துக்கு எங்களுக்குச் செல்ல முடியாது. அந்தச் சனங்கள் பலத்த காயங்களுடன் எங்களை நோக்கி வந்தார்கள். அவர்கள் வரும்போது எங்களுடைய கண்களில் இருந்து கண்ணீர் வடிந்தது. அவர்கள் வரவிடவில்லை. அவர்களை புலிகளே சுட்டார்கள். ஆனால் அவர்கள் இதனை திரிவுபடுத்தினார்கள். அப்பொழுது எங்களுடைய ஊடகம் மந்தகதியில் இருந்தது. நான் 1991, 1992 காலப் பகுதியில் மன்னார், கல்முனை உட்பட கிழக்குப் பகுதியில் கடமையாற்றியிருக்கின்றேன். அப்பொழுது அவர்கள் புலிகளுடைய நெருக்குவாரங்களை அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். கடைகள் மூடப்பட்டிருந்தன. வீடுகளில் நிம்மதியாக இருக்க முடியாது. இப்படிப் பல சொல்லொணாத் துயரங்களை அவர்கள் அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். இந்த மக்களை நாங்கள் இன்று சந்தோசமாக வாழ வைத்துள்ளோம். இராணுவத்தினர் சந்தோசமாக வாழ வைப்பவர்கள்.

நாங்கள் முஸ்லிம்களைச் சந்தேகக் கண் கொண்டு பார்ப்பதில்லை. என்ன நடந்துள்ளது என்று எங்களுக்கு நன்றாகத் தெரியும். இதற்கு முஸ்லிம்கள் யாவரும் சம்மந்தம் இல்லை என அறிந்து வைத்துள்ளனர். அடிப்படைவாதிகளைப் பற்றி எங்களால் அறிந்து கொள்ள முடியாது. அவ்வாறு இருப்பார்களாயின் எங்களுக்கு அறியத் தாருங்கள் என்று கூறியுள்ளோம். சிங்கள மக்கள் ஒரு போதும் அடுத்தவர் உயிரை மாய்த்து சந்தோசப்படும் மனிதர்கள் அல்லர். அப்படிச் செய்வார்களாயின் கடந்த காலங்களில் அதானித்திருக்க முடியும். அவ்வாறு அவர்கள் செய்யவில்லை - என்றார். (த)

# 'திகன' தாக்குதலாளிகளே குண்டுத் தாக்குதலில் கைது

## அவர்களின் பின்னணி என்னவென்று விசாரிக்குமாறு பிரதியமைச்சர் கோரிக்கை

கொழும்பு, மே 21

கண்டி திகன சம்பவத்துடன் தொடர்புபட்டவர்களே தற்போது நடத்தப்பட்டிருக்கும் இனவாதத்தாக்குதலில்கைது செய்யப்பட்டிருக்கின்றனர். அவர்களின் அரசியல் பின்னணி குறித்து அரசு தேடிப் பார்க்கவேண்டும் என்று பிரதி அமைச்சர் கருணாரத்ன பரணவிதாரன தெரிவித்தார்.

தேசத்துக்கானவழிஅமைப்பு நேற்று இலங்கை மன்றக் கல்லூரியில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

திட்டமிட்ட தாக்குதல்கள் உயிர்த்த ஞாயிறு தினத்தில் இடம்பெற்ற தாக்குதலுடன் மக்கள் ஆவேசப்பட்டு இன மோதல் ஒன்று ஏற்படும் அச்சம் அனைவர் மத்தியிலும் இருந்து வந்தது.

அவ்வாறான நிலைக்குச் செல்லாமல் மக்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளைச் சமயத் தலைவர்கள் மேற்கொண்டு வந்தனர். என்றாலும் தாக்குதல் இடம்பெற்று மூன்று வாரங்களுக்குப் பின்னர் தற்போது நாட்டின் சில பகுதிகளில் முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமான கடைகள் வீடுகளுக்கும் பள்ளிவாசல்களுக்கும் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது.

**பின்னணியை ஆராயுங்கள்**

இதற்குப் பின்னால் அரசியல் பின்னணி இருக்கவேண்டும். இவ்வாறானதொரு நிலைமை ஏற்படுவதையே பயங்கரவாதிகள் எதிர்பார்த்திருந்தனர். தற்போது இடம் பெற்றிருக்கும் சம்பவம் பயங்கரவாதிகளுக்குத் துணைபோகும்செயல்.

குருணாகல், சிலாபம், மினுவங்கொடை போன்ற பகுதிகளில் இடம்பெற்ற இனவாதத் தாக்குதலில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருக்கும் முக்கிய நபர்கள், கண்டி திகன சம்பவத்தில் பின்னணியில் இருந்தவர்கள். அதனால் இந்தத் தாக்குதல் சம்பவத்திலும் இவர்களுடன் இருக்கும் அரசியல் சக்திகளே இதனை முன்னெடுத்திருக்கவேண்டும். அதனால் இவர்களின் அரசியல் பின்னணி தொடர்பில் புலனாய்வுத் துறையினர் தேடிப் பார்க்கவேண்டும்.

தாக்குதல் சம்பவம் அரசியல் பின்னணியில் இடம் பெற்றிருப்பது மிகவும் தெளிவாகின்றது. மக்கள் கோபப்பட்டு ஒன்றை மேற்கொள்வதாக இருந்தால் பயங்கரவாதத் தாக்குதல் இடம்பெற்ற மறுதினமே இது இடம்பெற்றிருக்கவேண்டும். இந்தச் சம்பவம் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. தாக்குதல் சம்பவத்துடன்தொடர்புபட்டசந்தேகத்தில் கைதுசெய்யப்பட்டிருப்பவர்கள் எந்த அரசியல்வாதிகளுடன் கடந்த காலங்களில் தொடர்புகளை வைத்திருந்தனர் என்பதுஅனைவரும்அறிந்த விடயம்,- என்றார். (த-31)

## மட்டு. சீயோன் தேவாலயத்தில்

# கொல்லப்பட்டோருக்காக அஞ்சலியும் திருப்பலியும்

மட்டக்களப்பு, மே 21

மட்டக்களப்பு மாவட்டத்தில் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று சீயோன் தேவாலயத்தில் இஸ்லாமிய தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் உயிர்நீத்த உறவுகளின் ஆத்ம சாந்திக்காக திருப்பலியும், 31ஆம் நாள் அஞ்சலியும் ஆத்மசாந்திப் பூசையும் இன்று இடம்பெறவுள்ளன. கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் தலைவரும், சட்டத்தரணியுமான த.சிவநாதன் இதைத் தெரிவித்தார்.

மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று உயிரிழந்துள்ள உறவுகளுக்கு கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு புனித மரியாள் இணைப் பேராலயத்தில் இன்று முற்பகல் 10 மணியளவில் 31ஆம் நாள் அஞ்சலியும், ஆத்ம சாந்தித் திருப்பலிப் பூசையும் இடம்பெறவுள்ளன.




அதனைத் தொடர்ந்து மதியம் 12 மணியளவில் மட்டக்களப்பு அமிர்தகழி சிறிமாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் ஆத்ம சாந்திப் பூசையும் நடைபெறவுள்ளது. அதன்பின்னர் உறவுகளுக்காக அன்னதானம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. நிகழ்வில் உயிர்நீத்த உறவுகளின் குடும்பத்தார்கள் அனைவரையும், அனைத்து நண்பர்கள், உறவினர்களையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கிறோம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-46)



# புத்தரின் பேழை ரஜமகா விகாரைக்கு

சிவனொலி பாதமலை பருவகாலம் நிறைவடைந்து புத்த பெருமானின் ஆபரணங்கள் அடங்கிய பேழை மலை அடிவாரத்துக்குக் கொண்டுவரப்பட்டு இரத்தினபுரி பெல்மடுள்ள ரஜமகாவிகாரைக்கு நேற்றுமுன்தினம் எடுத்துச்செல்லப் பட்டது.

இந்தநிகழ்வில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமான் கலந்துக்கொண்டு சமய வழிபாடுகளில் ஈடுபட்டார். இந்த வழிபாட்டில் ஊவா மாகாண தமிழ்க் கல்வி அமைச்சர் செந்தில்தொண்டமான் மற்றும் பலரும் கலந்து கொண்டனர். (த)

வெசாக் கொண்டாட்டங்கள் நாடளாவிய ரீதியில் இம்முறையும் கொண்டாடப்பட்டது. பயங்கரவாத அச்சுறுத்தல் காரணமாக வெசாக் கொண்டாட்டங்கள் சோபை இழந்திருந்தாலும், ஆங்காங்கே வைக்கப்பட்ட வெசாக் கூண்டுகள் பலரின் கவனத்தை ஈர்க்கவே செய்தன. அந்த வகையில் மஸ்கெலியா பகுதியில் வைக்கப்பட்ட வெசாக் கூடுகளின் ஒளிப்படங்களே இவை. (ம)

# பயங்கரவாதத் தாக்குதல்களால் பாதுகாப்பு நிலமைகள் படுமோசம்

## தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எம்.பி தெரிவிப்பு

மட்டக்களப்பு, மே 21

நாட்டில் அரசியல் ரீதியாகப் பல்வேறு குழப்பங்கள் ஏற்பட்ட பின்னர், நாட்டில் ஏற்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்கள் காரணமாக பாதுகாப்பு நிலமை இன்னும் மோசமடைந்திருக்கின்றது - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.



**மீளவேண்டும்**

நடைபெற்ற பயங்கரவாதச்செயல்கள், ஒரு பன்னாட்டுப் பயங்கரவாதச் செயலாக கருதப்பட்ட போதிலும்கூட எமது நாட்டுக்குள்ளேயே ஒரு இன ரீதியாக பார்க்கும் ஒரு நிலமை தற்போது நிலவுகின்றது. அது எமது மக்கள் மத்தியில் பெரும் வேற்றுமைகளைக் காட்டிநிற்கின்றது. பெரும் பலவீனத்தையும், ஏற்படுத்துகின்றது. இந்த நிலமையிலிருந்து நாடு மீளவேண்டும், மீளப்பெறச் செய்யவேண்டும் என்றும் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிகுடி ஆதார மருத்துவமனையின் தற்போதைய நிலமைகள் தொடர்பிலான கலந்துரையாடல் ஒன்று திருகோணமலையில் அமைந்துள்ள சம்பந்தனின் அலுவலகத்தில் இரா.சம்மந்தனுக்கும் களுவாஞ்சிகுடி ஆதார மருத்துவமனையின் நலன்புரிச் சங்கத்தினருக்கும், இடையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் தமிழ் மக்கள் நீண்ட காலமாக பல்வேறு வன்முறைகளுக்கு, உள்ளாகி வந்திருக்கின்றார்கள். தமிழர்களுடைய உரிமைப்போராட்டம் சம்மந்தமாக, அரசியல் தீர்வு பெறுவதற்கு பல முயற்சிகள் எடுக்கபப்பட்டு, பல முன்னேற்றங்கள் ஏற்பட்ட போதிலும்கூட அது இன்னும் ஒரு முடிவுக்கு வரவில்லை. அதுவிடயம்சம்மந்தமாக விரைவில் ஒரு முடிவு வரவேண்டும். அதற்கான எமது முயற்சிகள் தொடர்கின்றன.

**பலமாய் இருக்க ஒற்றுமை அவசியம்**

தமிழ் மக்கள் பலமாய் இருப்பதற்கு அவர்கள் மத்தியில் ஒற்றுமை நிலவ வேண்டியது அத்தியாவசியம். பல்வேறு காரணிகள் நிமித்தம் மக்கள் மத்தியில் எல்லாக் கருமங்களிலும் ஒருமித்த கருத்து இருப்பது, கடினமான விடயம். தமிழ் மக்கள் ஒன்றைத் தெழிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். ஒற்றுமைதான் அவர்களுடைய பலம். அவர்கள் ஒற்றுமையில்லாமல் இருப்பார்களேயானால் அவர்கள் பலவீனமடைவார்கள்.

சமீபத்தில்கூட நாட்டில் பலவிதமான நெருக்கடிகள் ஏற்பட்டபொழுது, மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழ்ப் பிரதிநிதிகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூலமாகத் தெரிவு செய்யப்பட்ட தமிழ்ப் பிரதிநிதிகள், ஒற்றுமையாக ஒருமித்து செயற்பட்ட காரணத்தின் நிமித்தம், நாங்கள் எமது பலத்தை நிரூபிக்கத் தக்கதாக இருந்தோம். இந்த வருடத்தில் தேர்தல்கள் நடைபெறும். மாகாணசபைத் தேர்தல், அரசதலைவர் தேர்தல் என்பன நடைபெற வேண்டும். வருகின்ற வருடத்தில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறலாம், அல்லது அதற்கு முன்பாகவும் நடைபெறலாம், இந்தவிதமான கருமங்கள் நடைபெறுகின்ற போது தமிழ் மக்கள் ஒருமித்து ஒற்றுமையாக தங்களுடைய செயற்பாட்டின் மூலமாக தற்களுடைய பலத்தை பிரதிபலிக்கக் கூடிய நிலமையை ஏற்படுத்த வேண்டும். அது அத்தியாவசியமாகும்.

**தாமதங்கள் இருந்தாலும் முயற்சி தொடர்கின்றது**

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் நாங்கள் எடுக்க வேண்டிய அத்தனை முயற்சி களையும் எடுத்திருக்கின்றோம். அர சியல் கைதிகளை விடவில்லை என்று நாங்கள் துப்புரவாகச் சொல்ல முடியாது. ஐம்பது வீதமானவர்கள் விடுபட்டிருக்கின்றா ர்கள். மற்றவர்கள் விடுபடுவதைப் பொறுத்தவரையில், இருக்கின்ற அரசியல் கைதிகளை விடுவித்தால், பெரும்பான்மை மக்களின் மத்தியில் சில அரசியல்வாதிகள் அதனை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, ஆட்சியிலுள்ளவர்கள் பாதகமாகப் பயன்படுத்துவார்கள் என்பதன் நிமிர்த்தம், அதில் தாமதங்கள் இருக்கின்றன. ஆனால் எமது முயற்சி அந்த விடயம் சம்மந்தமாகத் தொடர்கின்றது.

**உரிய நேரத்தில் முடிவை அறிவிப்போம்**

அமைச்சர் ரிசாட் பதியுதீனுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பில் எமது கட்சி, நாடாளுமன்ற உறுப்பினர்கள், எமது நாடாளுமன்றக் குழு கூடி, உரிய நேரத்தில் எடுக்க வேண்டிய முடிவை நாங்கள் அறிவிப்போம் என்று தெரிவித்தார். (த)

# தாக்குதலாளிகளுக்கு உதவிய இலங்கைமென்பொறியியலாளர்

## மூன்று ஆண்டுகளாக கண்காணித்த இந்தியா

கொழும்பு, மே 21

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களில் ஈடுபட்டவர்களுக்கு முக்கிய உதவிகளை வழங்கினார் என்று சந்தேகிக்கப்படும் இலங்கையின் மென்பொருள் பொறியியலாளரை இந்தியா மூன்று வருடங்களாக கண்காணித்து வந்தது. இவ்வாறு ரொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

கிறிஸ்தவ தேவாலயங்களிலும் ஹொட்டல்களிலும் தாக்குதல்களை மேற்கொண்ட குழுக்களுக்கு மத்தியிலான தொடர்பாளராக 24 வயது ஆதில் அனீஸ் செயற்பட்டு வந்தார் என்று சந்தேகிப்பதாக விசாரணையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த மென்பொறியியலாளர் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளார். இது குறித்த தகவல்களை இலங்கை அதிகாரிகள் பகிரங்கப்படுத்தவில்லை என்று ரொய்ட்டர் தெரிவித்துள்ளது.

இந்தியாவின் தேசிய புலனாய்வு பிரிவைச் சேர்ந்த அதிகாரியொருவரும் குஜராத்தை சேர்ந்த அதிகாரியொருவரும் இந்த நபர் குறித்து இலங்கைக்கு தகவல்களை வழங்கியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டுள்ள நபர் பிரிட்டன் பல்கலைகழகத்தில் அரசியல் பயின்றவர். பின்னர் கணினி துறையில் பட்டமேற்படிப்பை பூர்த்தி செய்தவர் என்று ரொய்ட்டர் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையின் அவசரகால சட்டங்களின் கீழ் கைதுசெய்யப்பட்டுள்ள நபர் சட்டத்தரணியொருவரின் உதவியை பெறமுடியாது என்பதால் அவரைத் தொடர்பு கொள்ள முடியவில்லை என்று ரொய்ட்டர் தெரிவித்துள்ளது.

கைதான சந்தேகநபரின் தந்தை அனீஸ் தன்மகனுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிராகரித்துள்ளார்.

2006ஆம் ஆண்டு முதல் இந்த நபரை கண்காணித்து வந்துள்ளோம் என தெரிவித்துள்ள இந்திய புலனாய்வு பிரிவினர் இவர் ஐ.எஸ். அமைப்பின் ஆதரவாளர் என்று இந்திய நீதிமன்றில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நபர் குறித்து இந்தியா இலங்கைக்கு தகவல்களை வழங்கியதா என்பதை உறுதி செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது என்று ரொய்ட்டர் தெரிவித்துள்ளது.

இதேவேளை கைதாகியுள்ள ஆதில் தேசிய தௌஹீத் ஜமாத்துக்கும், ஜமாதி மிலாத் இப்ராஹிம் என்ற அமைப்பிற்கும் இடையிலான தொடர்புகளை ஏற்படுத்திக்கொடுத்தார் என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இலங்கையர் ஒருவருக்கும் இந்தியர்கள் இருவருக்குமான இணைய உரையாடல்கள் 2016 இல் ஆரம்பித்து 2017ஆம் ஆண்டு வரை நீடித்தமையை உறுதிசெய்யும் நீதிமன்ற ஆவணங்களை பார்வையிட்டுள்ளதாக தெரிவித்துள்ள ரொய்ட்டர்ஸ் செய்திச்சேவை இந்தியர்கள் இருவரும் கைதுசெய்யப்படும் வரை இந்த உரையாடல்கள் இடம்பெற்றன எனவும் குறிப்பிட் டுள்ளது.

கைதான சந்தேகநபர் அதில், எக்ஸ் என்று தன்னை அழைத்து கொள்ளும் நபர் இலங்கையில் பெரும்பான்மை இனத்தவர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளும் அநீதிகள் குறித்து அறிந்துள்ளீர்களா என்று இந்தியர்களிடம் கேள்வி எழுப்பியுள்ளார். அதன் பின்னர் அவர் தனது அனுபவங்கள் குறித்து தெரிவித்துள்ளார்.

ஆதில் தனது வீட்டிலிருந்து செயற்பட்டார். அவர் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களில் முக்கிய பங்காற்றினார். தொழில்நுட்ப மற்றும் பயிற்சிகளில் முக்கிய பங்களிப்பை வழங்கினார் என்று விசாரணை யாளர்கள் தெரிவித்துள்ளனர்

அவரே தாக்குதல்களை மேற்கொண்டவர்களின் முக்கிய தொழில்நுட்பவியலாளர் என்று விசாரணையில் ஈடுபட்டுள்ள குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் ரொய்டஸ் செய்திச் சேவைக்குத் தெரிவித்துள்ளார்.

தெகிவளையில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் கொல்லப்பட்ட அப்துல் லத்தீவ் முகமட் ஜமிலிற்கு ஆதிலே உதவினார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தாக்குதலுக்கு ஒரு வாரத்துக்கு முன்னர் ஆதில், ஜஹ்ரான் ஹாசிமையும் வேறு இரண்டு தற்கொலை குண்டுதாரிகளையும் சந்தித்தார் என்று தெரிவித்துள்ள அதிகாரிகள் அவரது வீட்டை சோதனையிட்டவேளை அவரது கணினியிலிருந்த அனைத்து ஆவணங்களும் அழிக்கப்பட்டிருந்தன என்று குறிப்பிட்டனர். (ஒ.5)



## படைப்புழுவின் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடுகள்

மட்டக்களப்பு, மே 21

படைப்புழுவின் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட 95 விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கப்பட்டன.

கடந்த வருடம் மட்டக்களப்பு மாவட்டத்தில் செய்கைபண்ணப்பட்ட சோளம் செய்கையில் படைப்புழுவின் தாக்கத்தால் நூற்றுக்கணக்கான ஏக்கர் சோளம் செய்கை அழிவடைந்தது. இந்த அழிவால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு தற்போது இழப்பீடு வழங்கும் நடவடிக்கை தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது.

இதன் ஒரு பகுதியாக மட்டக்களப்பு, மண்டபத்தடி விவசாய விரிவாக்கல் பிரிவில் பாதிக்கப்பட்ட 95 விவசாயிகளுக்கு விவசாயத் திணைக்களத்தால் 18 லட்சத்து 50 ஆயிரம் ரூபா காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டன.

(ஜ-46)

# ரிசாத் மீதான தீர்மானத்தை ஆதரிப்பதா? தமது நாடாளுமன்றக் குழுவே தீர்மானிக்கும்

## கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவிப்பு

கொழும்பு, மே 21

அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரிப்பதா? இல்லையா? என்று கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவே உரிய நேரத்தில் தீர்க்கமான முடிவு எடுக்கும். இந்தத் தீர்மானம் தொடர்பில் கூட்டமைப்பின் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் தனிப்பட்ட ரீதியில் தெரிவித்துவரும் கருத்துக்களுக்கு என்னால் பதிலளிக்க முடியாது.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரான அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு எதிராக 64 நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பங்களுடன் பொது எதிரணியினர் சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்பட்டி[illegible] நம்பிக்கையில்லாத் தீர்மானம் நாடாளுமன்ற ஒழுங்குப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இது சபையில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும்போது அதை ஆதரிக்க வேண்டும் எனவும், இல்லை அதை எதிர்க்க வேண்டும் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே இருவேறு நிலைப்பாடுகள் நிலவுகின்றன.

இந்தவிவகாரம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் நேற்றுமுன்தினமிரவு 'உதயன்' வினவியபோது அவர் தெரிவித்ததாவது:

அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரிப்பதா? இல்லையா? என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்னமும் முடிவெடுக்கவில்லை. இது தொடர்பில் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு உரிய நேரத்தில் தீர்க்கமான முடிவு எடுக்கும். எனவே, அவசரப்பட்டு எதனையும் கூற நான் விரும்பவில்லை. அதேவேளை, இந்தத் தீர்மானம் தொடர்பில் கூட்டமைப்பின் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துவரும் கருத்துக்களுக்கு என்னால் பதிலளிக்க முடியாது. அந்தக் கருத்துக்கள் அவர்களின் தனிப்பட்ட கருத்துக்கள்; அவை கட்சி சார்ந்த உத்தியோகபூர்வ கருத்துக்கள் அல்ல - என்றார். (த-22)

# பிற மதங்களை சேதப்படுத்தின் அரசு ஒருபோதும் வலுவடையாது

## அமைச்சர் சஜித் இப்படித் தெரிவிப்பு



கொழும்பு, மே 21

ஏனைய இனங்களையும் மத வழிபாட்டுத் தலங்களையும் சேதப்படுத்தி, சிங்கள பௌத்த அரசை வலுவூட்ட முடியாது என்று வீடமைப்பு மற்றும் கலாசார அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இன பேதங்களை முன்னிலைப்படுத்தி வன்முறைகளை மேற்கொள்ளும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் சம்புத்த சாசனம் சீர்குலைகிறது. பௌத்த சித்தாந்தங்களைப் பின்பற்றி அனைத்து இனத்தவர்களையும் மதங்களையும் பாதுகாத்து ஐக்கியத்துடன் வாழ வேண்டும்.

ஏனைய இனத்தவர் மற்றும் மதங்களின் வழிபாட்டுத் தலங்களைச் சேதப்படுத்தி சிங்கள பௌத்த அரசை வலுவூட்ட முடியாது.

அரசமைப்பில் பௌத்தத்துக்கு முக்கிய இடம் வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும் அதற்குத் தேவையான நடைமுறை வலுவையும் பாதுகாப்பையும் பொதுமக்கள் வழங்காவிட்டால் பௌத்தம் வலுவடையாது - என்றார். (த)

# ஆட்சியைக் கவிழ்க்கும் அடுத்த முயற்சியே ரிசாத் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம்

## கூட்டமைப்பின் சிறிநேசன் எம்.பி. தெரிவிப்பு

செங்கலடி, மே 21

அமைச்சர் ரிசாட் பதியுதீன் மீது கொண்டுவரப்படவுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கான இரண்டாம் கட்ட முயற்சியாகவே பார்க்கிறேன் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்தார்.

கிராம எழுச்சித் திட்டத்தினூடாக நாடாளுமன்ற உறுப்பினர் 20 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் மட்டக்களப்பு சித்தாண்டி பேச்சியம்மன் கோவில் வீதி சீரமைப்பு வேலைகளை நேற்று ஆரம்பித்தார்.

அதில் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:

அமைச்சர் ரிசாட் பதியுதீனுக்கு எதிராக நாடாளுமன்றில் கொண்டுவரப்படவுள்ள தீர்மானம் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தனித்தனியே முடிவெடுப்பதில்லை. எமது கட்சிக் கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பாக வாதப்பிரதிவாதங்கள் நடைபெற்ற பின்பே முடிவெடுக்க முடியும். இந்த விடயத்தை அறிவுபூர்வமாகச் சிந்திக்கும்போது பல விடயங்களை விளங்கிக்கொள்ள முடியும்.

மகிந்த ராஜபக்ச தலைமையிலான பொது மக்கள் முன்னணியினர் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவருகிறார்கள். ஆனால் கட்சியின் தலைவர் மகிந்த ராஜபக்ச இது வெற்றியில் முடியாது என்று கூறியுள்ளார். நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வந்து அமைச்சுப் பதவியைப் பறிக்கப் போகிறோம் என்று அமைச்சர் ரிசாட் பதியுதீனை பயமுறுத்தி அவரையும் அவரது கட்சி சார்ந்தவர்களையும் பொதுமக்கள் முன்னணி பக்கம் இழுத்துக்கொள்ளவே முயற்சிக்கிறார்கள். இவர்களை இணைத்தால் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசும் அவர்களது சமூகம் சார்ந்து அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு இணைந்துகொண்டால் இலகுவாக ஆட்சியைக் கவிழ்த்துவிட முடியும் என்று சதி செய்கிறார்கள்.

அமைச்சர் ரிசாட் பதியுதீனுக்கு எதிராகக் கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆரவாக வாக்களித்தால் அமைச்சுப் பதவி நாடாளுமன்ற உறுப்பினர் பதவி இல்லாமல் போய்விடும் என்று சில மேலோட்டமான சிந்தனையாளர்கள் கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் பொதுமக்கள் முன்னணி கட்சித் தலைவர் கையொப்பமிடாமல் ஏதோ அரசியல் சித்து விளையாட்டு காட்டி ரிசாத்தின் கட்சியைத் தனது பக்கம் எடுக்க முயற்சிக்கிறார்.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் மூலம் அமைச்சர் ரிசாட் பதியுதீனின் அமைச்சுப் பதவி, நாடாளுமன்ற உறுப்பினர் பதவி இழந்துவிடுவார் என்று நாங்கள் சிறு பிள்ளைத் தனமாக நினைப்பது நடந்துவிடப் போவதில்லை. மீண்டும் ஒரு அரசு அமைக்கப்படும்போது அவர் அமைச்சுப் பதவியைப் பெறுவதற்குரிய வாய்ப்பு உள்ளது என்பதை தெழிவாக விளங்கிக்கொள்ள வேண்டும் - என்றார். (த)

# தீர்மானம் பற்றி இன்னமும் முடிவெடுக்கவில்லையாம்

## மகிந்த கூறுகின்றார்



கொழும்பு, மே 21

பத்து குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு எதிராகக் கொண்டு வரப்படவுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரிப்பதா? இல்லையா? என்று இன்னமும் முடிவெடுக்க வில்லை.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தத் தீர்மானத்தை ஆதரிக்குமாறு பொது எதிரணியினர் என்னிடம் நேரில் கோரிக்கை விடுத்த னர். எனினும், எனது முடிவை நான் இன்னமும் அவர்களிடம் தெரிவிக்க வில்லை.

தீர்மானத்தை விவா தத்துக்கு எடுத்து க்கொள்வது தொடர்பில் நாடாளுமன்றக் கட்சித் தலைவர்கள் கூட்டம் இன்று நடைபெறவுள்ளது. அதன்பின்னரே எனது முடிவு அறிவிக்கப்படும் என்றார்.

இதேவேளை, அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச கையெழுத்திடாவிட்டாலும், அவர் அதற்கு ஆதரவாகவே வாக்களிப்பார் என்று பொது எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்திருந்தார். (த-22)

# ரிசாத்தின் வாகனத்திலேயே வடக்குக்கு ஆயுதங்கள் கடத்தல்

## இலங்கை மக்கள் தேசியக் கட்சி குற்றச்சாட்டு

வவுனியா.மே.21

ரிசாட் பதியூதீனின் வாகனத்தின் மூலமே வடக்குக்கு ஆயுதங்கள் பாதுகாப்பாகக் கடத்தப்பட்டிருக்கின்றன என்று இலங்கை மக்கள் தேசியக் கட்சியின் செயலர் நாயகம் நா.விஸ்ணு காந்தான் குற்றஞ்சாட்டியுள்ளார்.

வவுனியா வெளிக்குளத்தில் அமைந்துள்ள அவருடைய அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமைச்சர் ரிசாட் பதியுதீன் கடந்த காலங்களில் வடக்கு பகுதியில் பல்வேறு இடங்களிலும் குடியேற்றங்களை அமைத்தும் பள்ளிவாசல்களையும் அமைத்துக்கொடுத்துள்ளார். இவ்வாறான குடியேற்றப் பகுதிகளிலிருந்தும் பள்ளிவாசல்களிலும் இருந்துமே வெடிப்பொருள்கள் கைப்பற்றப்படுகின்றன. இவ்வாறான வெடிப்பொருள்கள் கொண்டுவருகின்றமை இலகுவான காரியமல்ல. இவை பாதுகாப்பான முறையிலேயே கொண்டுவரப்பட்டுள்ளன. அமைச்சர் ரிசாட்பதியுதீனின் ஆள்கள் அவருடைய வாகனத்தின் மூலமே ஆயுதங்களைக் கடத்தியிருக்க வேண்டும். ஆகவே இவர்கள் மீதான சரியான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று மேலும் தெரிவித்தார். (த-110)

# ஞானசாரதேரருக்கு விரைவில் பொதுமன்னிப்பு வழங்கப்படும்

## சிங்கள ஊடகம் தகவல்

கொழும்பு, மே 21

பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலர் கலகொடஅத்தே ஞானசார தேரர் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்படவுள்ளார் என்று சிங்கள ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

நீதிமன்றத்தை அவமதித்த குற்ற ச்சாட்டின் கீழ் தண்டனை பெற்றுள்ள அவரை விடுதலை செய்ய சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனை கோரப்பட்டுள்ளது. வெசாக் தினத்தையொட்டி நேற்றுமுன்தினம் ஒரு தொகுதி சிறைக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். இந்தநிகழ்வில் கலந்து கொள்வதற்காக அரசதலைவர் வெலிக்கடை சிறைச்சாலை வளாகத்துக்குச் சென்றிருந்தார்.

இதன்போது அரசதலைவருக்கும் ஞானசார தேரருக்குமிடையே சுமார் 45 நிமிடங்கள் வரையில் இரகசிய சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

நாட்டின் தீவிரவாதச் செயற்பாடுகள் குறித்து அரசதலைவரிடம் விரிவாகக் கூறிய தேரர், தாக்குதல் சம்பவங்கள் குறித்து ஆராயும் அரசதலைவர் விசாரணைக்குழு முன்னிலையில் முற்படுவதற்கு அனுமதி கோரினார். அதில் சாட்சியமளிக்க ஏற்பாடுகளை செய்வதாக அரசதலைவர் உறுதியளித்தார். சட்டமா அதிபர் திணைக்கள ஆலோசனை கிடைத்த பின்னர் பொதுமன்னிப்பின் கீழ் ஞானசார தேரர் விடுதலை செய்யப்படவுள்ளார் என்றும் அந்த ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (த)

# வற்றாப்பளை அம்மன் ஆலய பொங்கல் உற்சவம்...











## யாழ்...

யாழ்ப்பாணம், மே 21

யாழ்ப்பாணத்துக்கு அழைத்துவரப்பட்ட ஆப்கன் ஏதிலிகள் மீண்டும் யாழ்ப்பாணத்தில் இருந்து இரவோடு இரவாக இடம்பெயர்ந்துள்ளனர். ஏதிலிகளை அழைத்து வந்தவர்கள் வடக்கு மாகாண ஆளுநரின் இறுக்கமான முடிவால் மீண்டும் ஏதிலிகளை அழைத்துச் சென்றுள்ளனர் என்று தெரியவருகின்றது.

நீர்கொழும்பு, பாணந்துறையில் தங்கியிருந்த 6 பேரைக் கொண்ட ஆப்கன் குடும்பம் ஒன்று ஈஸ்டர் தினத் தாக்குதலை அடுத்து அங்கிருந்து வெளியே நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தது. அவர்களை தங்க வைப்பதற்குரிய வசதிகளைச் செய்து கொடுக்குமாறு கிறிஸ்தவ அமைப்பு ஒன்று விடுத்த வேண்டுகோளுக்கு அமைய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் ஏற்பாடுகளை மேற்கொண்டதுடன், அந்தக் குடும்பத்தையும் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வந்திருந்தார்.

அந்தக் குடும்பத்தை யாழ்ப்பாணத்தில் தங்க வைக்க வேண்டாம் என்றும், அதனால் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புண்டு என்றும் அழைத்து வந்தவரிடம் யாழ்ப்பாணம் பொலிஸார் அறிவுறுத்தியிருந்தனர். ஏதிலிகளை அழைத்து வந்தவர் பொலிஸாரின் கூற்றில் நியாயமில்லை என்று தெரிவித்து மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் யு.என்.எச்.சி.ஆர். ஆகியவற்றினதும், சபாநாயகரினதும் கவனத்துக்குக் கொண்டு சென்றிருந்தார்.

இந்த விடயத்தைப் பொலிஸார் வடக்கு மாகாண ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டு சென்றனர். அவர் வீட்டின் உரிமையாளரை அழைத்து உரையாடினார். வீட்டில் தங்க வைக்கப்பட்டுள்ள ஏதிலிகள் குடும்பத்தை உனடியாக அங்கிருந்து அகற்ற வேண்டும் என்றும், இல்லாவிடில் பெரும் ஆபத்து ஏற்படும் நிலைமை உள்ளது என்று வீட்டு உரிமையாளரிடம் ஆளுநர் அறிவுறுத்தியுள்ளார். வீட்டின் உரிமையாளர் அமெரிக்கக் குடிமகன் என்பதையும் சுட்டிக்காட்டிய ஆளுநர், அந்தக் குடும்பத்தை உடனடியாக வவுனியாவுக்கு அனுப்ப வேண்டும் என்றும் இறுக்கமாகத் தெரிவித்தார் என்று தெரியவருகின்றது.

இது தொடர்பாகச் சட்ட நடவடிக்கை எடுக்க 10 தினங்கள் கால அவகாசம் தேவை என்று வீட்டு உரிமையாளர் கோரியுள்ளார். ஆனால் 10 தினங்கள் வழங்க முடியாது. வெள்ளிக்கிழமைவரை மட்டுமே அவகாசம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டதால் நேற்று இரவு 8.30 மணியளவில் ஆப்கன் ஏதிலிகள் யாழ்ப்பாணத்தில் இருந்து மீண்டும் அழைத்துச் செல்லப்பட்டனர் என்றும் தெரியவந்தது. (எ-105)

## ஐ.தே.மு...

ளைத் தடுத்து நிறுத்த ஐக்கிய தேசிய முன்னணி அரசு தவறியுள்ளது என்று குற்றஞ்சாட்டியுள்ள மக்கள் விடுதலை முன்னணி அரசின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவரவுள்ளது.

இந்தத் தீர்மானம் இன்று செவ்வாய்க்கிழமை சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் கையளிக்கப்படவுள்ளது என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார். மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்தில் நேற்று முற்பகல் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் தெரிவித்ததாவது;

பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தவுள்ளனர் எனப் புலனாய்வுப் பிரிவினர் முன்கூட்டியே எச்சரிக்கை விடுத்திருந்தனர். வெளிநாட்டு அமைப்புகளாலும் தகவல்கள் வழங்கப்பட்டிருந்தன. ஆனால் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்கான நடவடிக்கை எவற்றையும் இந்த அரசு எடுக்கவில்லை.

அதேபோல் இந்த மாதம் 13ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களால், அரசின் நிர்வாகப் பொறிமுறையும் தோல்வி கண்டுள்ளது என்பது உறுதியாகியுள்ளது. தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசு தவறிவிட்டது. இந்த நாட்டை ஆள்வதற்கான தார்மீக உரிமையை, தகுதியை இந்த அரசு இழந்துவிட்டது. இந்த அரசை விரட்டியடிப்பதற்காக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவரவுள்ளோம். அது நாளை சபாநாயகரிடம் கையளிக்கப்படும். இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவு வழங்குமாறு நாம் அனைத்துக் கட்சிகளிடமும் கேட்டுக்கொள்கின்றோம்.

எவரையும் பாதுகாக்க வேண்டிய தேவை எமக்குக் கிடையாது. அமைச்சர் ரிசாத் பதியுதீன் குற்றவாளியெனில் அவர் தண்டிக்கப்பட வேண்டும். இராணுவத் தளபதிக்கு அவர் அழுத்தம் கொடுத்திருந்தால் கைதுசெய்யப்பட வேண்டும். பயங்கரவாதிகளையும், கொலையாளிகளையும் பாதுகாக்கும் கட்சி அல்ல எமது கட்சி. நாம் கொள்கை ரீதியிலேயே அரசியல் நடத்தி வருகின்றோம். கொள்ளையடித்து நாம் அரசியல் நடத்தவில்லை -என்றார். (எ-22)

## இன்று...

அனுப்பி வைக்க பெற்றோர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எந்தக் காரணம் கொண்டும் இரண்டாம் தவணை பரீட்சை உள்ளிட்ட ஏனைய பரீட்சைகளில் எவ்வித மாற்றமும் ஏற்படப் போவதில்லை. பரீட்சைகள் உட்பட மாணவர்களின் விடுமுறைகள், ஏனைய கல்வி நட்வடிக்கைகள் தொடர்பில் நாளை (இன்று) கூடவுள்ள கல்வி அமைச்சின் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும்- என்றார். (எ)

## ரிசாத்...

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அடியோடு நிராகரித்து விட்டார்.

நேற்றுமுன்தினம் கூடிய ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள், நம்பிக்கையில்லாத் தீர்மானம் அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ளதால் அவர் தற்காலிகமாகப் பதவியில் இருந்து விலகினால் பிரச்சினை களைச் சமாளிக்கலாம் எனவும், ரவி கருணாநாயக்க, திலக் மாரப்பன ஆகியோர் முன்னர் அமைச்சுப் பதவிகளில் இருந்து விலகியது போன்று ரிஷாத்தும் தனது பதவியிலிருந்து விலக வேண்டும் எனவும் தீர்மானித்தனர்.

இந்தக் கோரிக்கை பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவிடம் முன்வைக்கப்பட்டது. ஆனால், இந்தக் கோரிக்கையை உடனே நிராகரித்த ரணில், "தாக்குதல் சம்பவங்கள் தொடர்பிலோ அல்லது வேறு எந்தக் குற்றங்கள் குறித்தோ ரிசாத் மீது முன்வைக்கப்படாத நிலையில் அவர் பதவி விலகத் தேவையில்லை" என்று கட்சியின் மூத்த உறுப்பினர்களிடம் தெரிவித்துள்ளார். (எ-22)

## ஆதரவு...

பின்னர் உங்களுடன் நான் பேசுகின்றேன்." என்று அவருக்குப் பதிலளித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.

அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உள்ளகத் தகவல்களின்படி நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பில் அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு ஆதரவான நிலைப்பாட்டை அந்தக் கட்சி எடுக்கும் என்று அறிய முடிகின்றது. (எ-22)

## ரிசாத் விலக...

ஈஸ்ரர் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் முடிவடையும்வரை அவர் பதவி விலகியிருக்க வேண்டும்.

அமைச்சுப் பதவியிலிருந்து அவர் விலகாத பட்சத்தில் அவருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு நான் உட்படப் பலர் ஆதரவளிக்கவுள்ளோம். இது எமது தனிப்பட்ட முடிவு- என்றார். (எ)

## சிறப்புற...

கள்ளப்பாடு தீர்த்தக் கரையில் நடைபெற்றது. முள்ளியவளை காட்டா விநாயகர் ஆலயத்தில் இருந்து தீர்த்தக் குடம் எடுத்துச் செல்லப்பட்டு கள்ளப்பாடு தீர்த்தக் கரையில் தீர்த்தம் எடுக்கப்பட்டது. தீர்த்தம் காட்டா விநாயகர் ஆலயதத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு உப்புநீரில் விளக்கெரிக்கப்பட்டது. நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை வரை அங்கு வழிபாடுகள் நடைபெற்று நேற்றுமுன்தினம் விநாயகர் ஆலயத்தில் பொங்கல் நடைபெற்றது.

நேற்று அதிகாலை முள்ளியவளை காட்டா விநாயகர் ஆலயத்தில் இருந்து வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்துக்கு மடப்பண்டம் எடுத்து வரப்பட்டது. அதைத் தொடர்ந்து சிறப்புப் பொங்கல் வழிபாடுகள் ஆரம்பமாகி இரவு வரையில் நடைபெற்றன.

நாட்டின் பல இடங்களில் இருந்தும் வந்து பெரும் எண்ணிக்கையான மக்கள் பொங்கல் உற்சவத்தில் கலந்துகொண்டு பொங்கல் பொங்கி நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர். காவடிகள் எடுத்தும், தீச்சட்டி ஏந்தியும் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றியதையும் காண முடிந்தது.

### பலத்த பாதுகாப்பு

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்துக்கு அதிகளவான பக்தர்கள் வந்திருந்த நிலையில் பாதுகாப்பு ஏற்பாடுகளும் பலப்படுத்தப்பட்டிருந்தன. கடந்த மாதம் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலமைகளின் காரணமாக பொலிஸாரும், இராணுவத்தினமும் அதிக எண்ணிக்கையில் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

ஆலயத்துக்கு வந்திருந்த அனைத்துப் பக்தர்களும் உடற்சோதனைகளின் பின்னரே ஆலய சுற்றுவளாகத்துக்குள் செல்ல அனுமதிக்கப்பட்டனர். (எ-ரி3)

## வாட்டி...

கடும் வறட்சி நிலவுகின்றது என இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்தது.

புத்தளம் மாவட்டத்தில் கடந்த 5 மாதங்களுக்கு மேலாக கடும் வறட்சி நிலவுகின்றது. அங்குள்ள 8 பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். புத்தளம் மாவட்டத்தில் மாத்திரம் 9 ஆயிரத்து 960 குடும்பங்களைச் சேர்ந்த 34 ஆயிரத்து 673 பேர் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்தது.

வறட்சி காரணமாக குளங்களில் நீர் வற்றியுள்ளதுடன், மேய்ச்சல் தரைகளும் கருகிப்யேுள்ளன என்று கால்நடை வளர்ப்பாளர்கள் கூறுகின்றனர்.

அதேவேளை, வறட்சியால் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 13 ஆயிரத்து 769 குடும்பங்களைச் சேர்ந்த 46 ஆயிரத்து 41 பேரும், மன்னார் மாவட்டத்தில் 16 ஆயிரத்து 243 குடும்பங்களைச் சேர்ந்த 56 ஆயிரத்து 324 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 12ஆயிரத்து 770 குடும்பங்களைச் சேர்ந்த 40 ஆயிரத்து 107 பேரும், அம்பாறை, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களை உள்ளடக்கிய கிழக்கு மாகாணத்தில் 16 ஆயிரத்து 382 குடும்பங்களைச் சேர்ந்த 54 ஆயிரத்து 479 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-22)

## கேவில்...

நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இவருக்கு வலிப்பு நோய் இருப்பதால் அவர் வலிப்பால் பாதிக்கப்பட்டு நீரில் மூழ்கியிருக்கலாம் என்று சக மீனவர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பளைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-160,70)

## ‘ஹுவாவி’ அலைபேசிகளை நிராகரிக்கிறது கூகுள் செயலி

### அமெரிக்கா - சீனா முறுகலின் எதிரொலி


நியூயோர்க்.மே 21

‘ஹுவாவி’ அலைபேசி நிறுவனத்தால் பெறமுடியாதபடி கூகுள் தனது செயலிகளைக் கட்டமைத்துள்ளது. இது அமெரிக்காவுக்கும் சீனாவின் அலைபேசித் தயாரிப்பு நிறுவனமான ஹுவாவிக்கும் இடையே இருந்துவருகிற முரண்பாட்டின் எதிரொலியாகக் கொள்ளப்படுகிறது. கூகுள் வரைபடம், யூ டியூப் ஆகிய செயலிகளுக்கான அனுமதியும் ஹுவாவிக்கு மறுக்கப்பட்டுள்ளது. அமெரிக்க நிறுவனங்களுடன் வரத்தகம் செய்ய முடியாத நிறுவனங்களின் பட்டியலில் ஹுவாவியை அமெரிக்கா குறிப்பிட்டதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுகுறித்துத் தெரிவித்த கூகுள், “உத்தரவுக்கு ஏற்ப செயற்படுவதாகவும், விளைவுகள் குறித்து மறு ஆய்வு செய்துவருவதாகவும்” தெரிவித்தது. இது குறித்துக் ஹுவாவி எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை.

‘கூகுள் களஞ்சியம்’ இல்லாத அலைபேசிகளை வாங்குவதற்குப் பெரும்பாலும் பயனர்கள் விரும்பமாட்டார்கள் என்பதால் ஹுவாவியின் வர்த்தகத்தில் இது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் எனத் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் கூகுள் செயலிக்குப் பதிலான வேறொரு செயலியின் தேவை குறித்துக் ஹுவாவி சிந்திப்பதற்கும் இது சந்தர்ப்பம் அமைக்கும் என்று கூறப்படுகிறது.



# ‘காடையர்களின் நாடு அமெரிக்கா’

### ஐ.நாவில் முறையிட்டது வடகொரியா

பியோங்ஜாங், மே.21

அமெரிக்காவைக் ‘காடையர்களின் நாடு’ என்று குறிப்பிட்டது வடகொரியா. பன்னாட்டுச் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்படாமல் அமெரிக்கா தன்னிச்சையாகச் செயற்படுகிறது என்றும் வடகொரிய தெரிவித்தது.

இது குறித்து வடகொரியா, ஐக்கிய நாடுகளின் செயலரிடம் முறையிட்டது. இது தொடர்பான கடிதம் ஒன்றை ஐக்கிய நாடுகள் சபைக்கான வடகொரியாவின் தூதுவர், ஐ.நா. செயலருக்குக் கடந்த வெள்ளிக்கிழமை அனுப்பினார்.

அந்தக் கடிதத்தில், வடகொரியாவின் இறையாண்மைக்குக் குந்தகம் விளைக்கும் விதமாகப் பன்னாட்டு விதிமுறைகளை மீறி அமெரிக்கா செயற்படுகிறது’ எனக் குறிப்பிட்டார் அவர். வடகொரியாவுக்குச் சொந்தமான ‘வைஸ் ஹொனஸ்ட்’ என்ற கப்பல் வடகொரியாவிலிருந்து இந்தோனேஷியா நோக்கிச் சென்றுகொண்டிருந்த போது, அது பன்னாட்டுத் தடையை மீறியுள்ளது எனவும் அதைக் கைப்பற்றுவதற்குக் கடந்த ஏப்ரல் மாதம் 28ஆம் திகதியன்று அமெரிக்கா நீதித்துறை உத்தரவு பிறப்பித்திருப்பதாகவும் கூறி அமெரிக்கா இராணுவம் அந்தக் கப்பலைக் கைப்பற்றியது. இந்தப் பின்னணியிலேயே ஐ.நாவுக்கான வடகொரியாவின் தூதுவர் ஐ.நா. செயலரிடம் மேற்கண்டவாறு முறையிட்டார்.



# பிறேசிலில் துப்பாக்கிச் சூடு

### 6 பெண்கள் உட்பட 11 பேர் சாவு

றியோ டி ஜெனிரோ, மே 21

பிறேசிலில் மது அருந்தும் நிலையம் ஒன்றுக்குள் புகுந்த துப்பாக்கிதாரிகள் அங்குள்ளவர்களைச் சுட்டதில் 11 பேர் சாவடைந்தனர்.

பிறேசில் நாட்டின் பாரா மாநிலம், பெலம் நகரில் இந்தச் சம்பவம் நடந்தது. உந்துருளி மற்றும் மகிழுந்துகளில் வந்த நபர்கள், மதுபான நிலையத்துக்குள் புகுந்து துப்பாக்கியால் சரமாரியாகச் சுட்டனர். அங்கிருந்தவர்கள் அலறியடித்து ஓடினர்.

சிறிது நேரம் துப்பாக்கியால் சுட்ட அந்த நபர்கள், அங்கிருந்து சென்றனர். இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களில் 6பேர் பெண்களாவர். துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் தெரியவில்லை. தாக்குதல் நடைபெற்ற குறித்த மது விற்பனை நிலையத்தில் போதைப் பொருள் விற்பனை நடைபெறுகிறது.

எனவே, போதைப்பொருள் விற்பனையில் ஏற்பட்ட மோதல் இதற்குக் காரணமாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. இது குறித்துப் பிறேசில் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## அமெரிக்க தூதரகம் அருகே விழுந்தது ரொக்கெட்

பக்தாத்.மே 21

ஈராக்கின் தலைநகர் பக்தாத்திலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் அருகில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ரொக்கெட் ஒன்று விழுந்து வெடித்தது. இதனால் உயிரிழப்புகள் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. “இந்த ரொக்கெட், 2013ஆம் ஆண்டில் ஈரானியக் கப்பலில் இருந்து கைப்பற்றிய ‘கடுஸ்யா’ என்ற வகை ரொக்கட்டை ஒத்திருந்தது. இது பக்தாத்தின் கிழக்குப் பகுதியில் இருந்து ஏவப்பட்டிருகக்க வேண்டும். அந்தப் பகுதியில்தான் ஈரனின் ஆதரவுடன் இயங்கும் ஆயுதக் குழுக்கள்நிலைகொண்டுள்ளன” என்று ஈராக் இராணுவக்கூட்டுப்படைகளின் தளபதியும் பேச்சாள்ருமான யகையா ரசூக் கூறியதாகப் பன்னாட்டு ஊடகங்கள் செய்திவெளியிட்டன.

## சிரியா சென்று பயிற்சி பெற்ற பிரித்தானியர்களுக்குச் சிறை

லண்டன், மே 21



கடந்த சில மாதங்களில் பிரித்தானியாவிலிருந்து சிரியாவுக்கு 900போர் வரையில் சென்றிருப்பதாகவும், அவர்களில் 40 பேர் கைதுசெய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார் பிரித்தானியாவின் அரசியல் வாதியும் உள்நாட்டுச் செயலருமான சஜீத் ஜாவிட். சிரியா மற்றும் ஈராக்குக்குப் பயணித்த இவர்கள் அங்குள்ள இஸ்லாமிய ஆயுத அமைப்புக்களிடம் பயிற்சி பெற்று அவ்வவ் அமைப்புக்களின் போராளிகளாக இணங்காணப்பட்டுக் கைது செய்யப்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

பிரித்தானியவில் இருந்து சிரியாவுக்குச் செல்பவர்கள் அங்கு செல்வதற்கான சரியான காரணங்களை உறுதிப்படுத்தாத சந்தர்ப்பத்தில் அவர்களைக் கைது செய்து அவர்களுக்கு 10 வருடங்கள் வரையிலான சிறைத் தண்டனையை விதிப்பதற்கான சட்டமூலத்தை இந்த ஆண்டின் ஆரம்பத்தில் பிரிட்டன் உருவாக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# ஈராக் இராணுவம் அதிரடித் தாக்குதல்

## ஐ.எஸ். அமைப்பின் முகாம் அழிப்பு

பக்தாத்,மே 21

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினரின் முகாமைக் குறிவைத்து ஈராக் இராணுவம் நேற்று முன்தினம் நடத்திய திடீர்த் தாக்குதலில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினரின் அந்த முகாம் முற்றாக அழிந்தது. அத்தோடு அந்த முகாமுக்குள் இருந்து ஏராளமான வெடி பொருள்கள் கைப்பற்றப்பட்டன.

ஈராக்கின் அன்பார் மாகாணத்தில் உள்ள ராவா நகரத்தில் இருந்த முகாமே இவ்வாறு தாக்கியழிக்கப்பட்டது. ஐ.எஸ். ஆயுததாரிகளுக்குப் பயிற்சி அளிக்கவும், வெடிபொருள்கள் பதுக்கி வைக்கவும் இந்த முகாம் முக்கிய பங்காற்றி வந்ததாக ஈராக் இராணுவம் தெரிவித்தது.

# தஜிகிஸ்தான் சிறையில் கலவரம் இராணுவம் சூடு; 32 பேர் சாவு

டுஷான்பே, மே 21

தஜிகிஸ்தான்நாட்டின்சிறையில்கடந்த ஞாயிற்றுக் கிழமை கலவரம் ஏற்பட்டது. இந்தக்கலவரத்தில்32 பேர்சாவடைந்தனர்எனப்பன்னாட்டு ஊடகங்கள்செய்தி வெளியிட்டன.




தஜிகிஸ்தானின் வாக்தாத் நகரில் உள்ள சிறைச்சாலையில் கைதிகளுக்குஇடையேஏற்பட்டமுரண்பாடே கலவரமாக மாறியது என்று தெரிவிக்கப்படுகிறது. இந்த கலவரத்தில் கைதிகள்ஒருவரைஒருவர்தாக்கிக்கொண்டனர்.

இதையடுத்துப் பாதுகாப்புப் படையினர்அங்குவரவழைக்கப்பட்டுக்கலவரத்தைக் கட்டுப்படுத்த முனைந்தும் அது முடியவில்லை. கைதிகள் கலவரத்தைக்கைவிடவில்லை.

இதைத்தொடர்ந்து பாதுகாப்புப் படையினர் கைதிகள் மீது துப்பாக்கி சூடு நடத்தினர்.

இந்தக்கலவரத்தில் 29 சிறைகைதிகளும் 3 பாதுகாப்புபடையினரும் சாவடைந்தனர்எனத்தொிவிக்கப்பட்டது. சாவடைந்த கைதிகளில் பலர் ஐ.எஸ். ஐ.எஸ். ஆயுததாரிகள்என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக்கலவரத்துக்குத்தூண்டுதலாக இருந்தவர் தஜிகிஸ்தான் படைப் பிரிவின் தலைவராக இருந்த கல்முரட் காலிமொவ்வின் மகன் பெக்ரஸ் குல் மார்ட் என்று அந்த நாட்டின் அமைச்சகம் தெரிவித்தது. கலவரம் கட்டுப்பாட்டுக்குள்கொண்டுவரப்பட்டுள்ளநிலையில்குறித்தகலவரம்ஏற்பட்டதற்கான காரணம் குறித்து விசாரணை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்தியத் தேர்தல் களம்

## கருத்துக் கணிப்புகளுக்கு அரசியல்வாதிகள் பதில்

புதுடெல்லி, மே 21

7 கட்டங்களாக நடந்து முடிந்த இந்தியநாடாளுமன்றத்தேர்தலில்வாக்குகள் எண்ணப்பட்டு வருகின்றன. அதே நேரம் இந்திய ஊடகங்கள் தேர்தல் குறித்த கருத்துக்கணிப்புகளில்ஈடுபட்டன.

அதற்கு அரசியல் தலைவர்கள் பலரும்எதிர்வினையாற்றினர். ஊடகங்கள் நடத்திய கருத்துக்கணிப்பில், தேர்தல் முடிவுகள் பெரும்பாலும் பா.ஜ.காவுக்குச்சாதகமாகஉள்ளதாகவே குறிப்பிடுகின்றன. 'ரிபப்ளிக்' தொலைக்காட்சிமற்றும்சிவோட்டர் நடத்திய கருத்துக்கணிப்பு பா.ஜ.க. கூட்டணிக்கு 287 இடங்களும். காங்கிரஸ்கூட்டணிக்கு128இடங்களும். பிற கட்சிகளுக்கு 127 இடங்களும் கிடைக்கும் என்று கூறுகிறது. 'ரைம்ஸ் நவ்' நடத்திய கருத்துக்கணிப்புபா.ஜ.க. கூட்டணி306இடங்கள், காங்கிரஸ் கூட்டணி132இடங்கள், பிற கட்சிகள் 104 இடங்கள் பெறும் என்கிறது. 'நியூஸ் எக்ஸ்' தொலைக்காட்சிநடத்தியகருத்துக்கணிப்பு, பாஜக கூட்டணி 242 இடங்கள், காங்கிரஸ் கூட்டணி164இடங்கள் மற்றும் பிற கட்சிகள் 136 இடங்கள் பெறும் என என்கின்றன. 'இந்தியா டுடே ஆக்சிஸ்' வெளியிட்ட கருத்துக்கணிப்பில் தென் மாநிலங்களைப் பொறுத்த வரை, ஐக்கிய முற்போக்குக் கூட்டணி 55 - 63 தொகுதிகளிலும், தேசிய ஜனநாயக கூட்டணி 23 -33 தொகுதிகளிலும், பிற கட்சிகள் 35 -46 தொகுதிகளிலும்வெற்றிபெறவாய்ப்பிருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

இந்த நிலையில், நாட்டில் இன்றும் மோடியின்உயர்வுஉள்ளதுஎன்பது போன்ற நிலையை உருவாக்கவே தேர்தலுக்குப் பிந்திய இந்தக் கருத்துக்கணிப்புகள் எனக் கர்நாடக முதலமைச்சர்குமாரசாமிதெரிவித்தார். சாதகமாக இருந்தாலும், பாதகமாக இருந்தாலும் கருத்துக் கணிப்புகளில் நம்பிக்கையில்லை என்றார் திமுக தலைவர் மு.க.ஸ்ராலின். 'கருத்துக்கணிப்புகள் அல்லகருத்து திணிப்புகள்' என்றார் தமிழகமுதல்வர் எடப்பாடி பழனிசாமி. கருத்துக் கணிப்புகள், தேர்தல் முடிவுகள் அல்லஎனவெங்கய்யாநாயுடுதெரிவித்தார்.

கருத்துக்கணிப்புகளை நான் நம்புவது இல்லை என மேற்கு வங்க முதலமைச்சர்மம்தாபேனர்ஜிதெரிவித்தார்.







## பாலூட்டும் பிளாஸ்ரிக் போத்தல்களில் புற்றுநோயை ஏற்படுத்தும் வேதிப்பொருள்

புதுடெல்லி, மே 21

குழந்தைகளுக்குப் பாலூட்டுவதற்குப் பயன்படுத்தும் போத்தல்களில் புற்றுநோயை ஏற்படுத்தும் அபாயம்உடைய'பிஸ்பினால்-ஏ'என்ற மூலப்பொருள் இருப்பது ஆய்வின் வழியாகக் கண்டறியப்பட்டுள்ளதாக 'டாக்சிக் லிங்க்' என்கிற அமைப்புத் தெரிவித்தது.

'பிஸ்பினால்-ஏ'என்பது, பிளாஸ்ரிக் மூலப்பொருள்களில் ஒன்று. பிளாஸ்ரிக் போத்தல்கள் தயாரிப்பதற்கு இது அதிகம் பயன்படுத்தப்படுகின்றது.

குழந்தைகளுக்குப் பாலூட்டுவதற்காகத் தயாரிக்கப்படும் போத்தல்களில் இந்த வேதிப்பொருளைப் பயன்படுத்துவதை முற்றிலுமாக நிறுத்தவேண்டும்எனதெரிவிக்கப்பட்டு வருகிறபோதிலும் அதன் பயன்பாடு இன்னமும் நிறுத்தப்படவில்லை. 'பிஸ்பினால்-ஏ' பயன்படுத்தித் தயாரிக்கப்பட்ட போத்தல்களில் பாலூட்டும்போது, இந்த வேதிப்பொருள் நுண்ணிய வடிவில்கசிந்துஉடலுக்குள்செல்கிறது எனவும், அது குழந்தைகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்றது எனவும் கண்டறியப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



## இன்றைய நாள்

**மேடம்:** எதிர்வரும் பணிகளுக்கு முன்னேற்பாடு அவசியமாகும். தொழிலில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். பணப்பரிவர்த்தனையில் பாதுகாப்பு பின்பற்ற வேண்டும்.

**இடபம்:** வாழ்வில் வளம் பெற புதிய சூழல் உருவாகும். ஆர்வமுடன் பயன்படுத்துவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டு. பண சேமிப்பு அதிகரிக்கும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும்.

**மிதுனம்:** நியாயம், தர்மத்துடன் செயல்படுவீர்கள். இஷ்ட தெய்வ அருள் துணை நின்று உதவும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி ஏற்படும். பணம் கொடுக்கல், வாங்கல் சீராகும்.

**கடகம்:** மனதில் இனம் புரியாத வருத்தம் ஏற்படலாம். நண்பரின் ஆலோசனைநல்வழிகாட்டும். தொழில், வியாபார வளர்ச்சியில் மிகுந்த அக்கறை காட்டுவீர்கள். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும்.

**சிம்மம்:** செயலில் புதிய திருப்பம் ஏற்படும். உண்மை நிலவரம் உணர்ந்து பணிபுரிய வேண்டும். தொழில், வியாபார நடைமுறை சுமாரான அளவில் இருக்கும். பணவரவை விட செலவு அதிகரிக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**கன்னி:** பொதுநல சிந்தனையுடன் செயல்படுவீர்கள். முக்கியஸ்தரின் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு நிறைவேறும். குடும்பத்தினருடன் சுற்றுலா சென்றுவரத் திட்டமிடுவீர்கள்..

**துலாம்:** மாறுபட்ட நிகழ்வு குறித்து அதிருப்தி ஏற்படலாம். பேசுவதில் நிதானம் பின்பற்ற வேண்டும். தொழில், வியாபாரத்தில் நிலுவைப்பணியை முடிப்பது நல்லது. செலவுக்கு சேமிப்புப் பணம் பயன்படும். ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம்.


**விருச்சிகம்:** சுய நலம் கருதாமல் செயல்படுவீர்கள். அவமதித்து பேசியவர் அன்பு பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் குறுக்கீடு விலகும்.

**தனுசு:** உங்களின் நியாயமான பேச்சை சிலர் ஏற்றுக் கொள்ள மறுப்பர். தொழில், வியாபாரத்தில் உங்கள் உழைப்புக்கேற்ற வளர்ச்சி உண்டு. நிலுவைப் பணம் வசூலாகும்.

**மகரம்:** மனதில் ஞானம் நிறைந்த சிந்தனையுடன் செயல்படுவீர்கள். பெறுகின்ற அனுபவம் புதுவிதமாக இருக்கும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும்.

**கும்பம்:** உங்கள் தனித் திறமையை வளர்த்துக்கொள்வீர்கள். எதிரி இடம்மாறி போவர். தொழில், வியாபாரம் செழிக்க கூடுதல்அளவில்பணிபுரிவீர்கள். தாராள பணவரவு கிடைக்கும்.

**மீனம்:** தொடர்பில்லாத பணியில் ஈடுபட நேரலாம். குடும்ப உறுப்பினர் உங்களின் பொறுப்பை உணர்த்துவர். தொழிலில் உற்பத்தி, விற்பனை வளர்ச்சி பெறும். பணவரவு கூடுதலாக கிடைக்கும்.





## பெண்கள் பிரிவு ஈட்டி எறிதலில் கோப்பாய் செயலகத்துக்கு தங்கம்

யாழ்ப்பாணம், மே 21

யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான தடகளத் தொடரில் பெண்கள் பிரிவு ஈட்டி எறிதலில் கோப்பாய் செயலகத்தைச் சேர்ந்த ச.கஜினி தங்கப்பதக்கம் வென்றார்.

யாழ்ப்பாணம் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான தடகளத் தொடர் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

நேற்று இடம்பெற்ற பெண்களுக்கான ஈட்டி எறிதலில் கோப்பாய் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த கஜனி 31.40 மீற்றர் தூரம் எறிந்து தங்கப்பதக்கத்தையும் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த பா.சாணு 27.79 மீற்றர் தூரம் எறிந்து வெள்ளிப்பதக்கத்தையும் சாவகச்சேரி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த வ.சகானா 22.85 மீற்றர் தூரம் எறிந்து வெண்கலப்பக்கத்தையும் பெற்றனர். (ம-108)



### பெண்களுக்கான உயரம் பாய்தலில்


## சாதனையுடன் தங்கம் வென்றார் தெல்லியூர் வீராங்கனை ஹெரீனா

யாழ்ப்பாணம், மே 21

யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான தடகளத் தொடரில் பெண்கள் பிரிவு உயரம் பாய்தலில் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ்.ஹெரீனா புதிய சாதனையுடன் தங்கப்பதக்கம் வென்றார்.

யாழ்ப்பாணம் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான தடகளத் தொடர் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற பெண்களுக்கான உயரம் பாய்தலில் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தை பிரதிநிதித்துவம் செய்த எஸ்.ஹெரீனா 1.59 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து புதிய சாதனையை பதிவு செய்து தங்கப் பதக்கத்தையும் எஸ்.சுவர்ணா 1.42 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும் க.நிறோசினி 1.39 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் சுவீகரித்துள்ளனர். (ம-422)






## ஈகிள்ஸ் அணி வென்றது

யாழ்ப்பாணம், மே 21

கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் யங்கம்பன்ஸ் பிறீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ஈகிள்ஸ் அணி வெற்றிபெற்றது.

கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் ஈகிள்ஸ் அணியை எதிர்த்து றெட்செவின் அணி மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் ஈகிள்ஸ் அணி வெற்றிபெற்றது. ஆட்ட நாயகனாக தரன் தெரிவு செய்யப்பட்டார். (ம-23)

### 1,500 மீற்றர் ஓட்டத்தில்

## சண்டிலிப்பாய் செயலகம் ஆதிக்கம்

யாழ்ப்பாணம், மே 21

யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான தடகளத் தொடரில் பெண்கள் பிரிவு 1,500 மீற்றர் ஓட்டத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் பதக்கங்களை வழித்துத் துடைத்தது.

யாழ்ப்பாணம் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான தடகளத் தொடர் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பெண்களுக்கான 1500 மீற்றர் ஓட்டத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த லி.மேரி வினுஷா தங்கப் பதக்கத்தையும், சி.சியானா வெள்ளிப் பதக்கத்தையும், த.தர்மிகா வெண்கலப் பதக்கத்தையும் சுவீகரித்துள்ளனர். (ம-422)

## ஆண்கள் பிரிவு உயரம் பாய்தலில் தெல்லிப்பழை பதக்கம் வென்றது

யாழ்ப்பாணம், மே 21

யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான உயரம் பாய்தலில் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தைப் பிரதி நிதித்துவம் செய்த எஸ்.யதுர்சன் தங்கப் பதக்கத்தைச் சுவீ கரித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான தடகளத் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆண்களுக்கான உயரம் பாய்தலில் எஸ்.யதுர்சன் 1.88 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து தங்கப் பதக்கத்தையும், நல்லூர் பிரதேச செயலகத்தைப் பிரதி நிதித்துவம் செய்த ஆர்.ஜினோசன் 1.88 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும் யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த வை.சிம்ரொம் 1.80 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் சுவீகரித்தனர். (ம-422)





இத்தாலி ரென்னிஸ் தொடர்;

# நாடல், பிளிஸ்கோவா கிண்ணம் வென்றனர்

இத்தாலியின் ரோம் நகரில் செம்மண் தரையில் பகிரங்க ரென்னிஸ் தொடர் கடந்த 11 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வந்தது. இதில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற அரையிறுதி ஆட்டமொன்றில் நடப்பு சம்பியனும், ரென்னிஸ் உலக தரவரிசையில் இரண்டாவது இடத்தில் இருப்பவருமான ஸ்பெயின் வீரர் ரபேல் நடாலும், தரவரிசையில் 7ஆவது இடத்தில் உள்ள கிரீஸ் வீரர் சிட்சிபாஸ்ஸும் மோதினர். இதில் நடால் 6:3, 6:4 என்ற நேர்செற் கணக்கில் சிட்சிபாஸ்ஸை வீழ்த்தி இறுதிக்குள் நுழைந்தார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில், நடால் உலகத் தரவரிசையில் முதல் நிலை வீரரான நோவக் ஜோகோவிச்சை எதிர் கொண்டார்.

இதில் நடால் 6:0, 4:6, 6:1 என்ற செற் கணக்கில் ஜோகோவிச்சை வீழ்த்தி சம்பியனானார். இந்தப் பட்டத்தை நடால் வெல்வது இது 34 ஆவது முறையாகும்.

இதேவேளை பெண்களுக்கான ஒற்றையர் பிரிவில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் செக்குடிரசு வீராங்கனை கரோலினா பிளிஸ்கோவா 42ஆம் நிலை வீராங்கனையான இங்கிலாந்தின் ஜோஹன்னா கோன்டாவை எதிர்கொண்டார். சுமார் ஒரு மணி 25 நிமிடங்கள் நீடித்த இந்த ஆட்டத்தில் பிளிஸ்கோவா 6:3, 6:4 என்ற நேர் செற் கணக்கில் ஜோஹன்னா கோன்டாவை வீழ்த்தி சம்பியனானார்.

1978ஆம் ஆண்டுக்கு பிறகு செக்குடியரசு வீராங்கனை ஒருவர் இந்தப் பட்டத்தை வெல்வது இதுவே முதல் முறையாகும். பிளிஸ்கோவா கைப்பற்றிய 13ஆவது பன்னாட்டு பட்டம் இதுவாகும்.

## பாக். வீரர் ஆசிப் அலியின் மகள் புற்றுநோயால் சாவு

பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் ஆசிப் அலியின் இரண்டு வயது குழந்தை உயிரிழந்துள்ளது. ஆசிப் அலியின் மகள் நூர் பாத்திமா, புற்றுநோயால் பாதிக்கப்பட்டு அமெரிக்காவில் சிகிச்சை பெற்று வந்தார்.

புற்றுநோயானது நான்காவது கட்டத்தை எட்டி விட்டதால் அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. எனினும் சிகிச்சை பயனளிக்காத காரணத்தால் பாத்திமா பரிதாபகரமாக உயிரிழந்தார்.

பாகிஸ்தான், இங்கிலாந்து அணிகளுக்கிடையேயான ஐந்து ஒருநாள் போட்டிகள்



கொண்ட தொடர் இடம்பெற்று வருகின்றது. இதில் விளையாடிய ஆசிப் அலி தகவல் அறிந்ததும், இங்கிலாந்தில் இருந்து உடனடியாக புறப்பட்டுள்ளார்.

இது குறித்து பாகிஸ்தான் சூப்பர் லீக்கின் இஸ்லாமாபாத் யுனைடெட் அணி தெரிவிக்கையில்;

ஆசிப் அலியின் இரண்டு வயது மகள் காலமாகியுள்ளதற்கு நாங்கள், எங்களின் ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். ஆசிபிற்காகவும், அவரின் குடும்பத்துக்காகவும் நாங்கள் பிரார்த்தனை செய்து கொள்கிறோம். வலிமைக்கும் தைரியத்துக்கும் முன்னுதாரணம் ஆசிப். அவர் நம் எல்லோருக்கும் சான்றாக வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்று ருவிற்றில் பதிவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## யுவராஜ் ஓய்வா?

இந்திய கிரிக்கெட் அணியின் சகலதுறை ஆட்டக்காரர் யுவராஜ்சிங் 2017ஆம் ஆண்டு ஜூலை மாதத்துக்குப் பிறகு அணியில் இருந்து நிரந்தரமாக ஓரங்கட்டப்பட்டார். அவர் ஐ.பி.எல். மற்றும் உள்ளூர் போட்டிகளில் மட்டும் தொடர்ந்து விளையாடி வருகின்றார்.

இந்த நிலையில், யுவராஜ்சிங் பன்னாட்டு கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற திட்டமிட்டுள்ளார். இதுகுறித்து இந்திய கிரிக்கெட் சபை நிர்வாகி ஒருவர் தெரிவிக்கையில்;

பன்னாட்டு கிரிக்கெட் மற்றும் முதல்தர போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவது குறித்து யுவராஜ்சிங் சிந்தித்து கொண்டிருக்கிறார். இது தொடர்பாக அவர் இந்திய கிரிக்கெட் சபையிடம் பேச விரும்புகிறார். கனடாவில் நடக்கும் குளோபல் லீக் மற்றும் மேற்கிந்தியத்தீவுகள், அயர்லாந்து, நெதர்லாந்தில் நடக்கும் ரி/20 போட்டிகளில் ஆடுவதற்கு அவருக்கு அழைப்பு வந்துள்ளது. இதற்கு கிரிக்கெட் சபையின் அனுமதியை கோருகிறார்- என்றார்.

யுவராஜ்சிங் 2011ஆம் ஆண்டு இந்திய அணி உலகக் கிண்ணத்தை வெல்வதற்கு முக்கிய காரணமாக இருந்தார். அந்த உலகக் கிண்ணத்தில் அவர் 362 ஓட்டங்களுடன், 15 இலக்குகளையும் கைப்பற்றி தொடராட்ட நாயகன் விருதைப் பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

## செல்ரா - வலிக்கனோ ஆட்டம் சமநிலையில்

ஸ்பானிய கழகங்களுக்கிடையில் இடம்பெற்று வரும் லா லிகா தொடரில் செல்ரா விகோ - வலிக்கனோ அணிகள் மோதிய போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

முதல் பாதி ஆட்டம் ஆரம்பித்ததும் வலிக்கனோ அணிக்கு பெனால்ட்டி வாய்ப்பொன்று கிடைக்க அந்த அணியின் வீரர் எம்பராபா ஒரு கோலைப் போட்டார். முதல் பாதி ஆட்டத்தில் வலிக்கனோ அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பித்ததும் வலிக்கனோ அணி வீரர் மெட்ரான் 71ஆவது நிமிடத்தில் ஒரு கோலைப் போட போட்டி விறுவிறுப்பானது செல்ரா விகோ அணியின் ஆக்ரோசமாக ஆட ஆரம்பித்தனர். செல்ரா விகோ அணிக்கு ஆட்டத்தின் 82ஆவது நிமிடத்தில் பெனால்ட்டி வாய்பொன்று கிடைக்க அந்த அணியின் வீரர் அஸ்பஸ் அருமையான ஒரு கோலைப் போட்டார். மீண்டும் ஆட்டத்தின் இறுதி நிமிடத்தில் 90ஆவது நிமிடத்தில் அஸ்பஸ் ஒரு கோலைப் போட போட்டி இறுதியில் 2:2 என்ற கோல் கணக்கில்சமநிலையானது. வலிக்கனோ அணியின் பக்கமே ஆட்டத்தின் இறுதி வரை வெற்றி வாய்ப்பு காணப்பட்ட போதிலும் செல்ரா விகோ அணி வீரரின் அபாரமான ஆட்டத்தால் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.






சமூக வலைத்தளத்தில்

## விராட் கோக்லிக்கு 10 கோடி ரசிகர்கள்

இந்திய அணித் தலைவர் விராட்கோக்லி தனது அபாரமான ஆட்டத்தின் மூலம் உலகின் தலைசிறந்த துடுப்பாட்ட வீரராக ஜொலிக்கிறார். இதன் காரணமாக அவருக்கு ஏராளமான ரசிகர்கள் உலகம் முழுவதும் காணப்படுகின்றனர். அவர் தன்னை பற்றிய செய்தி, படங்களை சமூக வலைத் தளங்களில் அவ்வப்போது பதிவிடுவார். இந்த நிலையில் சமூக வலைதளங்களில் கோக்லியை 10 கோடி ரசிகர்கள் பின் தொடர்வது தெரிய வந்துள்ளது. இதன் மூலம் சமூக வலைத்தளங்களில் 10 கோடிக்கு மேலாக பின்பற்றப்படும் முதல் கிரிக்கெட் வீரர் என்ற சாதனையை அவர் பெற்றார்.

இன்ஸ்டா கிராமில் 3.36 கோடி பேரும், முகப் புத்தகத்தில் 3.7 கோடி பேரும், கீச்சகத்தில் 3.7 கோடி பேர் என மொத்தம் 10 கோடி பேர் கோக்லியை பின் தொடர்கின்றனர்.

பிரபல கால்பந்து வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோவை இன்ஸ்டாகிராமில் மட்டும் 16.7 கோடிபேர் பின் தொடர்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள CD Dawn (BCX-XXX) உடன் விற்பனைக்கு.

தொடர்புக்கு - 077 578 2684

# ஒப்பந்தத்தை நீடித்தார் டோனி குரூஸ்

ஜேர்மனி கால்பந்து அணியின் வீரர் டோனி குரூஸ் ரியல் மட்ரிட் அணிக்காக விளையாடி வருகிறார். கடந்த ஆண்டு யூரோ கிண்ணத்தை வென்ற மட்ரிட், இந்த ஆண்டு மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது.

இதனால் ரியல் மட்ரிட் 14 வீரர்களை வெளியேற்ற இருப்பதாக தகவல் வெளியானது. இதில் டோனி குரூஸ் பெயரும் இருந்தது. இந்த நிலையில் குரூஸ் ரில் மட்ரிட் உடனான ஒப்பந்தத்தை 2023 ஆம் ஆண்டு வரை நீடித்துள்ளார்.

இவர் பேயர்ன் முனிச் அணியில் இருந்து கடந்த 2014ஆம் ஆண்டு ரியல் மட்ரிட் அணிக்கு வந்தார். இவர் இது வரை 233 போட்டிகளில் விளையாடி 11 கிண்ணங்களை வென்று கொடுத்துள்ளார்.




இலங்கையில் இறக்குமதி செய்து விநியோகிப்போர்,
வரை. ஸ்டபர்ட் மோட்டார் (தனியார்) நிறுவனம்

பிரதான காரியாலயம் : 718/7, மருதானை வீதி, கொழும்பு 10, தொ: 011-7607200. மோட்டார் சைக்கிள் காட்சியறை : 195, கொழும்பு வீதி, ரத்தனபிட்டிய, போரலஸ்கமுவ. தொ : 011-7607705.
மற்றும் நாடளாவிய ஹொன்டா விற்பனையாளர் வலையமைப்புகளூடாக. / Honda Sri Lanka

A/L வரலாறு 2021
யாழ்.முதல்நிலை வரலாற்றாசிரியர்
M.பத்மன் M.A (History)
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
கற்பிக்கும் இடங்கள்
D.M.I யாழ்ப்பாணம்
உயர்கலைக் கல்லூரி குளப்பிட்டி.
புகழ் மானிப்பாய்.




## மரண அறிவித்தல்



### இராசையா செல்வராஜா (ஐயா)

சாந்தை பிள்ளையார் கோயிலடி பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா செல்வராஜா (ஐயா) 18.05.2019 சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் சாந்தை பண்டத்தரிப்பைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான இராசையா தங்கமலர் தம்பதிகளின் இரண்டாவது மகனும் காலஞ்சென்றவர்களான மாரிமுத்து - நாகம்மா தம்பதிகளின் மூத்த மருமகனும் சாந்தகுமாரியின் அன்புக் கணவரும் சந்திரராஜா, செல்வகுமார், சிவரதன், சுதாந்தினி, உசாந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் செல்வரூபினி, விஜிதா, மீராதேவி, சுதேகரா ஆகியோரின் அன்பு மாமனாரும் தர்ஜிகா, அகிஷா, யபிஷா, அனிஸ்கன், கவினா ஆகியோரின் பாசமுள்ள பேரனும் காலஞ்சென்றவர்களான அன்புமலர், நாகரத்தினம், பவளமலர் மற்றும் புவனேந்திரம், ஜெயராஜா,பாரிசாதமலர், விக்கினராஜா, புஸ்பராஜா, தேவராஜா ஆகியோரின் பாசமுள்ள சகோதரரும் தணிகாசலம், சந்திரசேகர் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.05.2019) செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சம்பில்துறை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சாந்தை பிள்ளையார் கோயிலடி,
பண்டத்தரிப்பு.

தகவல்:
குடும்பத்தினர்.

077 801 2335

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.05.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.